பக்கங்கள்: ஆறு

Registered

# உதயன்

விலை ரூ2/50

சுடர்: 4 சுக்கில ஆனி 07 புதன்கிழமை ஹிஜ்ரி 1409 ஜுல்ஹஜ்தா பிறை 16 (21 - 06 - 1989) UTHAYAN - A LIVELY NATIONAL TAMIL DAILY கதிர்:- 167

NEW MASTER INSTITUTE
B. M. C. Lane,
JAFFNA.
A/L 91
Week End Classes
நடைபெறுகின்றன.
7.30 - PURE & APPLIEDMATHS
7 30 - ZOOLOGY
8.30 - BOTANY
10.30 - CHEMISTRY
11.30 - PHYSICS

NEW MASTER INSTITUTE
90 A/L & 91
Week End Classes
(Sat & Sun)
ஆசிரியர் குழு
PHYSICS - திரு. வர்ணம்
CHEMISTRY - திரு. தில்லைநாதன்
BOTANY - திரு. குகாதரன்
ZOOLOGY - திரு. நாகநாதன்
PURE & APPLIED-MATHS
திரு. நல்லையா.

## கொழும்பில் நிலைமை மோசம்! ரயில் சேவையும் சீர்குலைவு!!

கொழும்பு, ஜுன் 21

கொழும்பில் வழமைநிலை நேற்று மேலும் பாதிப்படைந்தது.

போக்குவரத்துச்சபை ஊழியரின் வேலைநிறுத்தத்தினால் பஸ்சேவைகள் பாதிப்புற்றிருந்தவேளையில், ரயில்வே ஊழியர்களும் நேற்று வேலைக்குச் செல்ல மறுத்துவிட்டனர்.

இதனால் கொழும்பிலும் மற்றைய தென்பகுதியின் ஏனைய பிரதேசங்களிலும் போக்குவரத்து நேற்று முற்றாகப் பாதிப்படைந்தது.

தமக்குப் போதிய பாதுகாப்பு இல்லை எனத் தெரிந்தே ரயில்வே ஊழியர்கள் வேலைக்குச் செல்ல மறுத்தனர். இதனால் ரயில்வே சேவை முற்றாகச் சீர்குலைந்தது.

படையினர் பாதுகாப்புடன் இங்கொன்றும் அங்கொன்றுமாக சில ரயில்கள் சேவையில் ஈடுபட்டன. எனினும் தூர இடங்களுக்கான ரயில்கள் எவையும் நேற்றுச் சேவையில் ஈடுபடவில்லை.

எதிர்வரும் வெள்ளிக்கிழமையன்று தமது சம்பளக் கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொண்டவுடன் ரயில்வே பிரிவு ஊழியர்கள் தொடர் வேலைநிறுத்தத்தில் குதிக்கலாம் எனக் கொழும்பில்

(6ஆம் பக்கம் பார்க்க)

## தனியார்துறைக்கு கடன் வழங்குவதில் கட்டுப்பாடு

### மத்திய வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஜுன் 21

மத்திய வங்கி தனியார் துறையினருக்கு கடன் வழங்குவதில் கட்டுப்பாடு (Credit-Squeeze) விதித்திருக்கிறது.

'தனியார்துறை' என்ற வரையறைக்குள் அரசு கூட்டுத்தாபனங்கள் மற்றும் அரசுக் கட்டுப்பாட்டில் உள்ள சபைகளும் அடங்கும் என்று அறிவிக்கப்பட்டிருக்கிறது.

கடன் வழங்கும் புதிய கட்டுப்பாட்டில் இருந்து பிரதானமாகக் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்திற்கு விதிவிலக்களிக்கப்பட்டுள்ளது.

கட்டுப்பாடுகளில் இருந்து விதிவிலக்குப்பெற்ற ஏனைய அரசுக்குச் சொந்தமான நிறுவனங்கள் வருமாறு:—

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம், தேசிய சேமிப்பு அபிவிருத்தி வங்கி, தேசிய சேமிப்பு வங்கி, அரச அடமான, முதலீட்டு வங்கி ஆகியன.

விவசாயத்துறை வளர்ச்சி, ஏற்றுமதி மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி ஆகிய தொடர்பான கடன்கள் வழங்கப்படுவதற்கும் மத்திய வங்கி விதிவிலக்களித்திருக்கிறது.

உடனடியாக அமுலுக்கு வந்திருக்கும் புதிய கடன்

(6ஆம் பக்கம் பார்க்க)

## கிழக்கில் மாணவர் பலர் விடுவிப்பு

கொழும்பு, ஜுன் 21

கிழக்கு மாகாணத்தில் ஒரு சில குழுவினரால் கூட்டிச் செல்லப்பட்டு, தடுத்துவைக்கப்பட்டவர்களில் பாடசாலை மாணவர்கள் பலர் விடுவிக்கப்பட்டு வருவதாக அங்கிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன:

திருகோணமலை, மட்டக்களப்பு, அம்பாறை ஆகிய மாவட்டங்களில் கடந்தவார இறுதியில் சுமார் 3,000பேர் தடுத்துவைக்கப்பட்டதாகச் செய்திகள் வெளியானது தெரிந்ததே.

விடுவிக்கப்பட்டவர்களில் மாணவர்களுடன் தொழில் புரிபவர்களும் அடங்குகிறார்கள் என்று தகவல் தெரிவிக்கின்றன. ஊர்ஜிதமான எண்ணிக்கை விவரம் தெரியவில்லை.

## அமைதிப்படையால் ஆயுதங்களை முற்றாகக் களைய முடியவில்லை

### நாடாளுமன்றத்தில் பிரதமர்

கொழும்பு, ஜுன் 21

★ இலங்கை—இந்திய ஒப்பந்தத்தின் பின்னர் இலங்கைப் படைகள் வடக்கு, கிழக்கில் இருந்து அகற்றப்பட்டனர். சில சந்தர்பங்களில் இந்திய அமைதிப் படையினர் பொலீசாரின் உதவியைப்பெற்றனர்:

★ கிழக்கு மாகாணத்தில் சிங்கள, முஸ்லிம் மக்களுக்கு உரிய பாதுகாப்பு அளிக்க அமைதிப் படையினர் தவறிவிட்டனர்:

★ வடக்கு — கிழக்கில் தமிழ்க் கிளர்ச்சியாளர்களிடம் இருந்து ஆயுதங்களைக் களையும் பொறுப்பு இந்திய அமைதிப் படையிடமே கொடுக்கப்பட்டது. ஆனால் அவர்களால் அதனைச் செய்ய முடியவில்லை. தமிழீழ விடுதலைப் புலிகளிடம் இருந்து 20 சதவீத ஆயுதங்களை மட்டுமே அவர்களால் பறிக்க முடிந்தது.

[6ஆம் பக்கம் பார்க்க]

## எமது கல்வியைத் தொடர உதவுக!

### மாணவர் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 21

தமது கல்வியைத் தொடர்வதற்கு உதவுமாறு கோரி பாடசாலை மாணவர்கள் ஒன்றியம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

ஒன்றியத்தின் சார்பில் அதன் செயலாளர் பு. ராகீசன் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

தற்போது எமது பிரதேசத்தில் இடம்பெறும் செயற்பாடுகளால் மாணவர்கள், ஆசிரியர்கள், புத்திஜீவிகள் படுமோசமாகப் பாதிக்கப்படுவதையும் —

பாதிப்பின் உச்சக்கட்டமாகப் படுகொலை செய்யப்படுவதையும் கண்டித்து, தமது பாதுகாப்பிற்கு உத்தரவாதம் வழங்கக்கோரிப் பாடசாலைகளைப் பகிஷ்கரித்துவரும் இந்தவேளையில்கூட மாணவர்கள், ஆசிரியர்கள் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்கள்.

[illegible] கல்லூரி மாணவன் கஜேந்திரன், அச்சுவேலியில் ஆசிரியர் சி.விஜயகமூர்த்தி மற்றும் இரண்டு மாணவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டது குறிப்பிடத்தக்கது.

அத்துடன் வீதிகளில் நடமாடும் இளம் வாலிபர்கள், குறிப்பாக மாணவர்கள் ஆட்திரட்டலுக்கு எனப் பலவந்தமாகத், தமக்கு இஷ்டமில்

[6ஆம் பக்கம் பார்க்க]

## இந்திய சினிமா பாடல்களுக்கும் தடை?

யாழ்ப்பாணம், ஜுன் 21

இலங்கை வானொலியில் இந்திய பாடல்கள் ஒலிபரப்புச் செய்யப்படுவது மறு அறிவித்தல்வரை இடைநிறுத்தப்படலாம் என தெரியவருகிறது.

இலங்கை ரூபவாஹினியில் இந்திய படங்கள், பாடல்கள் உட்பட இந்தியாவிலிருந்து தருவிக்கப்பட்ட நிகழ்ச்சிகள் ஒளிபரப்புச் செய்வது தற்போது இடைநிறுத்தப்பட்டுள்ளது தெரிந்ததே.

அதே நேரம் கொழும்பில் இந்திய தமிழ்த் திரைப்படம் காண்பிப்பதற்குரிய தடையினால் சினிமாத்துறை பாதிக்கப்பட்டுள்ளதாகத் திரைப்பட வர்த்தகர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

(இ-21)

## ஐந்து மாத இடைவெளிக்குப் பின் அவசரகால சட்டம் மீளவும் பிரகடனம்

### தயக்கத்துடனேயே அமுல் செய்வதாக அரச தரப்பில் அறிவிப்பு

கொழும்பு, ஜுன். 21

ஐந்து மாத கால இடைவெளியின் பின்னர் மீண்டும் அவசர காலச் சட்டத்தை ஜனாதிபதி பிரேமதாச நேற்றுப் பிறப்பித்தார்.

அவசர காலச் சட்டம் பிறப்பிக்கப்பட்ட தகவலை சபாநாயகர் அல்ஹாஜ் எம். எச். முஹம்மது நேற்று மாலை நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

பொதுமக்கள் நன்மை கருதி தயக்கத்துடனேயே அவசரகாலச் சட்டத்தை அமுல் செய்ய அரசாங்கம் முடிவு செய்ததாக வெளிவிவகார அமைச்சரும் பாதுகாப்புத் துணை அமைச்சருமான ரஞ்சன்விஜேரத்ன தெரிவித்தார்.

திரு. ரஞ்சன் விஜேரத்ன இதுபற்றி சபையில் தெரிவித்ததாவது:-

1983 ஆம் ஆண்டு ஜுலையில் அமுலுக்கு கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டம் 1989 ஜனவரி 11 இல் நீக்கப்பட்டது.

இதை அடுத்து பல்வேறு முகாம்களில் தடுத்து வைக்சப்பட்டிருந்த ஆயிரத்து 800 பேர் எதுவித நிபந்தனையுமின்றி விடுவிக்கப்பட்டனர்.

இதனை அடுத்து அப்பாவி மக்கள் கொலைசெய்யப்படுதல், பஸ் வண்டிகள் தீக்கிரையாக்கப்படுதல், அரச உடைமைகளுக்கு சேதம் ஏற்படுத்தல் உட்பட பல வன்செயல்கள் இடம்பெற்றன.

நாட்டில் பல்வேறு பகுதிகளில் இயங்கிவரும் நாசகார

(6ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்தி முரளி



மீண்டும் அவசரகாலமாம். அப்ப பழைய குருடி கதவைத் திறவடி எண்ட கதை தானே......!

சுபநேரம்:
21—06—1989
ஆனி — 07
புதன்கிழமை
சுபநேரம்:
04.24 முதல் 05 54 வரை
ராகுகாலம்:
11 54 முதல் 01.24 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்

### புத்தளத்தில் ஹர்த்தால்

கொழும்பு, ஜுன் 21

புத்தளம் பகுதியில் நேற்று ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டது. நகரில் கடைகள் பூட்டப்பட்டிருந்தன.

பொலீஸாருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் ஏற்பட்ட ஒரு சம்பவத்தை அடுத்தே ஹர்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

(இ)

## யாழ் ஆஸ்பத்திரிக்கு இரத்தம் அவசரம் தேவை!

யாழ் - ஆஸ்பத்திரியின் இரத்த வங்கியில் இரத்தத்திற்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. உடனடியாக இரத்த தானம் செய்து நோயாளர்களைக் காப்பாற்றும்படி வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

யாழ் ஆஸ்பத்திரி இரத்த வங்கியில் கையிருப்பில் உள்ள இரத்தம் குறைந்து வருகின்றது. இதேவேளை இரத்த தானம் செய்வோர் எண்ணிக்கையும் தினசரி குறைந்து வருவதாக இரத்த வங்கி வைத்திய அதிகாரி தெரிவித்தார்..

நேற்று இரத்த வங்கியில் ஏழு பைந்த் இரத்தமே கையிருப்பில் இருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ.10)

## பொலீஸ் டிரக் - டிராக்டர் விபத்து! ஐவர் பலி!!

பொலீஸ் டிரக் — டிராக்டர் விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த நால்வர் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் கடந்த திங்களன்று அம்பாந்தோட்டை நகர எல்லையில் இடம்பெற்றது. (உ)

## திருநெல்வேலி மோதலில் விடுதலைப் புலிகள் இருவரும் ஜவான் ஒருவரும் பலி!

யாழ்ப்பாணம், ஜுன் 21

திருநெல்வேலி சேணியடிப் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோதலில் விடுதலைப் புலிகள் இருவர் மரணமடைந்தனர்.

சண்முகம் உதயவர்மன், என். சண்முகநாதன் ஆகியோரே கொல்லப்பட்டனர் என்று இந்திய அமைதிப்படையின் கோண்டாவில் முகாம் பொறுப்பாளர்தெரிவித்தார்.

இந்த இருவரினதும் சடலங்களும் நேற்றுக் காலை இந்திய அமைதிப்படையினரால் யாழ் வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டன.

இந்த மோதலில் இந்திய அமைதிப்படையின் ஜவான் ஒருவர் மட்டும் கொல்லப்பட்டார் என்றும் தெரிவிக்கப்பட்டது.

## நேற்றும் பாடசாலைகள் தொடர்ந்து இயங்கவில்லை

யாழ் மாவட்டத்தில் பாடசாலைகள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகியவை நேற்றும் இயங்கவில்லை.

பாடசாலைகளுக்கு ஆசிரியர்கள், அதிபர்கள் வந்திருந்தனர். எனினும் மாணவர் வரவு குறைவால் பாடபோதனைகள் நடைபெறவில்லை.

எனினும் கிராமப்புறப் பாடசாலைகள் சில இயங்கியதாகத் தெரிவிக்கப்பட்டது.

## அமெரிக்க இளம் பெண் அழுகிய சடலமாக மீட்பு!

கொழும்பு, ஜுன் 21

அமெரிக்க நாட்டை சேர்ந்த இளம் பெண் ஒருவரின் சடலம் அழுகி, சிதைந்த நிலையில் நுவரெலியாவில் குதிரைப்பந்தயத் திடலுக்கு அருகே கிடக்கக் காணப்பட்டது.

கடந்த மார்ச் மாதம் நீர்கொழும்பிலிருந்து காணாமற் போன சண்ட்ரா வலன்டைன் (வயது 31) என்ற பெண்ணின் சடலமாக இது இருக்கலாம் என பொலீஸார் சந்தேகப்படுகின்றனர். (உ)

## நயினாதீவு சேவையில் வ. பி. போ. ச. புதிய சாதனை

யாழ்ப்பாணம், ஜுன் 21

நயினாதீவு ஆலய உற்சவத்தின் போது வட பிராந்திய போக்குவரத்துச் சபை வருவாயில் சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளது.

கடந்த 20ஆம் திகதி தேர்த்திருவிழாவன்று இந்தப்பாதையில் சேவையில் ஈடுபட்டதன் மூலம் ஒருநாள் வருவாயாக ஒரு லட்சத்து 62 ஆயிரம் ரூபாவையும் —

மறு நாளான 21 ஆம் திகதி தீர்த்தோற்சவத்தின் போது ஒரு நாள் வருவாயாக ஒரு லட்

(6ஆம் பக்கம் பார்க்க)

## மல்லாகம், மாவிட்டபுரம் பகுதியில் இருவர் பலி!

மல்லாகத்திலும், மாவிட்டபுரத்திலும் நேற்று இருவர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

மாவிட்டபுரத்தில் உயிரிழந்தவர் ஏழாலையைச் சேர்ந்த-35 வயது மதிக்கத்தக்க- மரக்கறி வியாபாரி எனச் சந்தேகிக்கப்படுகிறது. இவரது சடலம் அடையாளம் காணப்படுவதற்காக தெல்லிப்பழை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ளது.

மல்லாகம் நீதிமன்றத்திற்கு முன்பாக நேற்றுக்காலை ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டார். (உ)

## வவுனியா பகுதியில் மூவர் சுட்டுக் கொலை!

வவுனியா, ஜுன் 21

நேற்றும் நேற்று முன்தினமும் வவுனியா பகுதியில் மூவர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள்.

திங்களன்று இடம் பெற்ற ஒரு சம்பவத்தில் வவுனியா — யாழ் வீதியில் பேயாடி கூழாங்குளம் பகுதியில் ஓர் இளைஞனும் சிறுவன் ஒருவனும் சூட்டுக் காயங்களுடன் சடலங்களாகக் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டனர்.

[illegible] இளைஞனின் பெயர் பெரிய தம்பி என்றும் தெரிவிக்கப்பட்டது.

கைகள் பின்னால் கட்டப்பட்டநிலையில் இவரின் சடலம் கிடக்கக் காணப்பட்டது. சிறுவன் யார் என்பது தெரியவரவில்லை

செவ்வாயன்று மன்னார் வீதி வேப்பங்குளம் பகுதியில் மற்றொரு இளைஞர் சுட்டுக்கொல்லப்பட்டார். இவரின் பெயர் விபரம் தெரியவில்லை. (உ-164)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

103 SRI 1408 இலக்க CB 50 Honda மோட்டார் சைக்கில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு இல 9/6, மலர்மகள் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம். (11318)

10 சிறி வெஸ்பா ஸ்கூட்டர் (இத்தாலி) நல்ல நிலையில் விற்பனைக்கு உண்டு. Agro Marine Ltd. 35 Bank-Shall Street Jaffna. (796)

பாவித்த அலுமாரிகள் உட்பட வீட்டுத்தளபாடங்களும் புத்தக அலுமாரிகள் Fan, Sisil Fridge Bicycle, Singer தையல் மெசின் விலை உயர்ந்த குத்துவிளக்குகள் T.V. மற்றும் பல மின்சார உபகரணங்கள் விற்பனைக்கு உண்டு. Supeka 343, பருத்தித்துறை ரோட், அரசடி நல்லூர். (11311)

### விற்பனையாகின்றது

தமிழ்மொழி அடிப்படை அறிவும் செயல்நெறியும் ஆண்டு 7, 8, 9 இந்நூல்கள் மொழித்திறன், அடிப்படை இலக்கணம், தொடரியல், பாடநூல்கள் செயல்நெறிகள் என்பவற்றுடன் தேர்வு வினாத்தாள்களும் கொண்ட புதிய வெளியீடாகும். திறமைச் சித்திக்கு மாணவர்களுக்கு இது ஒரு கை விளக்கு. வெளியீடு கு. வி. அச்சகம், யாழ்ப்பாணம் (787)

### கோழிக்குஞ்சு விநியோகம்

Hisex, Golden comet பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், சேவற்குஞ்சுகள், Hyline வெள்ளை, கறுப்பு, பிறவுண் பேட்டுக் குஞ்சுகள், Hybro புரொயிலர் குஞ்சுகள் கறுப்பு சேவற் குஞ்சுகள் முன்கூட்டியே பதிவுசெய்து ஒவ்வொரு வாரமும் பெற்றுக் கொள்ளலாம். சற்குணராஜா & பிரதர்ஸ், பிரம்படிலேன், கொக்குவில். [549]

### Typewriter

தட்டச்சு இயந்திரங்கள் வாங்கவும் விற்கவும் சிறந்த முறையில் திருத்திக் கொள்ளவும், தமிழ், ஆங்கில ரைப்பிங் செய்து கொள்ளவும் நாடுங்கள்; Fudo Enterprises, 39/17 மின்சார நிலைய வீதி, 3ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம். [சி/2833]

### தேவை

தைப்பதற்கு பெண் பிள்ளைகள் தேவை. நேரில் வரவும். 73 சதீற்றல் வீதி, யாழ்ப்பாணம். 794)

### தவறிவிட்டது

எனது அடையாளஅட்டை இலக்கம் 480880498V தாவடிச் சந்திக்கும் தாவடி பிள்ளையார் கோவிலுக்கும் இடையில் தவறிவிட்டது. கண்டெடுப்போர் கு. நவரத்தினராஜா (கார் ராசு) தாவடிச் சந்தியில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். (11312)

நடராசா கிருஷ்ணமூர்த்தி 30, ஆத்திக்காடு அரியாலை அடையாள அட்டை இல: 580042198V தவறிவிட்டது. கிடைத்தவர்கள் தயவுசெய்து உதயன் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (11314)

### மடு திருப்பதி யாத்திரை

காவலூர் புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோஸ் நிர்வாகிகளால் தனிப்பட்டவர்களுக்கான மடு யாத்திரை பஸ்மூலம் பிரயாணத்துக்கு ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளது. விரும்பியோர் எம்மிடம் தொடர்பு கொள்ளவும்: புனித சிந்தாத்திரை மாதா செபமாலை ஸ்ரோஸ் 140, சுருவில் வீதி கரம்பொன் ஊர்காவற்றுறை. (11308)

### Nallur Farm Centre

Nallur Farm Centre Prima Lohmann வெள்ளை, சிவப்பு பேட்டுக் குஞ்சுகள் Prima Broiler குஞ்சுகள் சிவப்பு சேவற் குஞ்சுகள் Golden Comet Hyline பேட்டுக்குஞ்சுகள் ஒவ்வொரு செவ்வாய், புதன்கிழமைகளில் பெற்றுக் கொள்ளலாம் C/o நல்லூர் வீடியோசென்ரர், 19 முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (சி/2796)

### பெண் நெசவாளர் தேவை

சங்கானை மின்தறி நெசவாலைக்கு அனுபவமிக்க பெண் நெசவாளர், பயிலுநர் உடன் தேவை. நேரில் வரவும். (தங்குமிட வசதியுண்டு) தொடர்பு: மின்தறி நிலையம், T. C. ஒழுங்கை, சங்கானை. (795)

### கோழிக்குஞ்சு விநியோகம் UPLANDS FARM

சுறுப்புக் குஞ்சு பதிந்தவர்கள் தயவுசெய்து 23- 6- 89 வெள்ளிக்கிழமை வந்து பெற்றுக்கொள்ளவும். இல. 9, கந்தையா லேன், சுன்னாகம். (புகையிரத நிலையத்துக்கு அண்மையில்) (793)

### தேவை

டீசல் மெக்கானிக் வேலையில் அனுபவமுள்ளவர்கள் தேவை. தங்கும் இடம், உணவு வசதி கொடுக்கப்படும். சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கலாம். நேரில் வரவும். க. செல்வராசா விஜிதா டீசல்கராஜ், ஸ்ரீவள்ளிகபே, முன் ஒழுங்கை, சாவகச்சேரி. (792)

## யாழ். பாடசாலை மேற்பார்வை கல்வி அதிகாரி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். கல்வித்திணைக்கள விஞ்ஞானக் கல்வி அதிகாரி எஸ். நடராசா யாழ் பிரதேச கல்வித்திணைக்களத்தில் பாடசாலை மேற்பார்வைக் கல்வி அதிகாரியாக நியமிக்கப்பட்டுள்ளார்.

எஸ். நடராசா யாழ். மத்திய கல்லூரியில் விஞ்ஞான ஆசிரியராகவும் மாததளைப் பகுதி விஞ்ஞானக் கல்வி அதிகாரியாகவும் நீண்ட காலம் கடமையாற்றியவர்.

1983 ஆம் ஆண்டு இவர் யாழ் மாவட்ட விஞ்ஞானக் கல்வி அதிகாரியாக இடம் மாற்றம் பெற்றார் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)

## ஆதர்கிளார்க் புதிய பதவி

கொழும்பு, ஜூன் 21

அனைத்துலக விண்வெளிப் பல்கலைக்கழகத்தின் வேந்தர் பதவியை பிரபல விஞ்ஞான எழுத்தாளர் டாக்டர் ஆதர் கிளார்க் ஏற்றிருக்கிறார்.

மொரட்டுவை பல்கலைக் கழக வேந்தராக தற்போது டாக்டர் ஆதர்கிளார்க் பணி புரிந்து வருகிறார். (இ-எ)

## பொலீஸ் அத்தியட்சகர்

மட்டக்களப்பு, ஜூன் 21

திரு. எஸ். ஸ்ரீபன் மட்டக்களப்பு பொலீஸ் அத்தியட்சகராகக் கடமை ஏற்றுள்ளார். (ச - 21)

# மட்டக்களப்பு பொலீஸ் நிலைய இந்தியபடை பாதுகாப்பு வாபஸ்

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பு பொலீஸ் நிலையத்துக்கு இந்தியப்படையினால் வழங்கப்பட்டிருந்த பாதுகாப்பு வாபஸ் பெறப்பட்டு படையினர் வெளியேறியுள்ளனர்.

எனினும் பிரதிப் பொலீஸ் மா அதிபர் அலுவலகத்தில் தொடர்ந்து இந்திய பொலீஸ் பிரிவு இயங்கி வருகிறது.

கல்லடிப் பாலம், ஊறணி ஆகிய இடங்களில் ஸ்ரீலங்கா பொலீஸ் — இந்தியப்படை கூட்டுரோந்து வழமைபோல் நடைபெறுகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தியப்படையினரின் வழமையான நடவடிக்கைகளில் எவ்விதமான மாற்றமும் இல்லை.

சுற்றிவளைப்பு, தேடுதல், சோதனை, ரோந்து என்பன வழமைபோல் நடைபெற்று வருகின்றன. (இ-21)

## அன்பளிப்பு

வட்டக்கச்சி, ஜூன் 21

உருத்திரபுரம் சிவநகர் மாதர் கிராம அபிவிருத்திச் சங்கத்துக்கு சுய தொழில் வேலை வாய்ப்புக்கென கிளிநொச்சி கிராம அபிவிருத்தி உத்தியோகத்தரால் ரூபா 6000 மும் பாய் நெய்யும் கைத்தறிக் கருவியும் அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (ச-163)

## வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம்

வித்துவ சிரோமணி சி. கணேசையர் போன்ற அநுபூதிமான்களால் போற்றப்பெற்ற தெல்லிப்பளை வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய உற்சவம் 22. 6. 1989 வியாழக்கிழமை ஆரம்பமாகும். 2.7. 1989 ஞாயிற்றுக்கிழமை தேர்த்திருவிழாவும், 3.7.89 திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும் நடைபெற உள்ளன.

அடியார்கள் வந்து தரிசித்துப் பிறவிப் பெரும்பயன் பெறும்படி திருப்பணிச் சபையினர் பணிவுடன் கேட்டுக் கொள்கிறார்கள். (11309)

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை

# பதவி வெற்றிடங்கள்

### விவசாய பீடம் கிளிநொச்சி

இப் பல்கலைக்கழகத்தில் கீழ்க் குறித்த பதவிக்கான விண்ணப்பங்கள் 1989 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி வரை என்னால் பெற்றுக்கொள்ளப்படும்.

**பதவிகள்:** (1) தொழில்நுட்பவலர் தரம் 11 பிரிவு 'பி'
(2) தொழிலாளி தரம் 111

**சம்பள அளவுத் திட்டம்:**
(1) ரூ. 2085 - 10x40; 7x50 -2835/- மாதாந்தம்
(2) ரூ. 1375 - 3x30 - 1465/- மாதாந்தம்

**தகைமைகள்:**
(1) **தொழில்நுட்பவலர் தரம் 11 பிரிவு 'பி'** இரண்டு தடவைகளுக்கு மேற்படாது 5 திறமைச் சித்திகளுடன் க. பொ. த. (சா. த.) பரீட்சையில் 6 பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும். திறமைச் சித்திகளுள் விஞ்ஞானம், கணிதம் என்பன அடங்கியிருத்தல் வேண்டும்.

வயது: 40 வயதிற்கு மேற்படலாகாது.

தெரிவு: தேர்வின் மூலமும் நேர்முகப் பரீட்சை மூலமும்

குறிப்பு: தொழில்நுட்பவலர் சேவை 'பி' பிரிவின் கீழான நியமனம் முதலில் மாதம் ஒன்றிற்கு ரூ. 1975/- நிலையான சம்பளத்தில் மூன்று ஆண்டு காலத்திற்கு பயிற்சி பெறும் தொழில்நுட்பவலர் என்ற அடிப்படையில் வழங்கப்படும்.

**தகைமைகள்:**
(2) **தொழிலாளி தரம் 111** ஏழாம் வகுப்பில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது: 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு: நேர்முகப் பரீட்சை மூலம் நடைபெறும்.

தெரிவு செய்யப்படுபவர்கள் கிளிநொச்சியில் கட்டப்படவிருக்கும் விவசாய பீடத்தில் வேலைக்கு அமர்த்தப்படுவார்கள்.

ஒவ்வொரு விண்ணப்பப்படிவத்திற்கும் ரூ. 20/- செலுத்தி இப் பல்கலைக்கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் / தாபனக்கிளையிலிருந்து பெறக்கூடிய படிவங்களில் விண்ணப்பங்கள் செய்தல் வேண்டும். படிவங்களையும் ஏனைய விபரங்களையும் தபால் மூலம் பெற விரும்புவோர் ரூ. 20/- பெறுமதியான காசுக்கட்டளை/ தபாற் கட்டளையை 23 x 10 ச. மீ அளவுடைய சுய முகவரியிட்டு முத்திரை ஒட்டப்பெற்ற கடித உறையுடன் அனுப்புதல் வேண்டும்.

மேற்குறிப்பிட்டவாறு ரூ. 20/- அனுப்பிப் பெறப்படாத விண்ணப்பங்களும் தெளிவாக விபரங்கள் குறிப்பிடப்படாத விண்ணப்பங்களும் குறித்த திகதியின் பின்பு கிடைக்கும் விண்ணப்பங்களும் நிராகரிக்கப்படும்.

அரசாங்கத் திணைக்களங்கள், அரச கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபையிலுள்ள விண்ணப்பதாரி அவரின் நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும்.

- பதில் பதிவாளர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம், இலங்கை,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1989. 06. 17 (சி/2880)

## சாவகச்சேரி நகராட்சி மன்றம்

# ஆதனவரி அறிவித்தல்

1989 ஆம் ஆண்டு 2 ஆம் சுந்தாயத்துக்குரிய ஆதனவரியை 30.06.1989 ஆந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு முன்பு இக் காரியாலயத்தில் செலுத்திப் பற்றுச் சீட்டுப் பெற்றுக் கொள்ளும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். தவறின் இத் திகதிக்குப் பின்பு செலுத்தப்படும் வரியுடன், வசிப்பிட வளவுகளுக்கும், வெற்றுக் காணிகளுக்கும் பதினைந்து வீதமும் (15%), ஏனைய ஆதனங்களுக்கு இருபது வீதமும் (20%) கூடுதலாகச் சேர்த்து அறவிடப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்ளுகின்றேன்.

ஆதனவரி செலுத்தப்படாத வெற்றுக் காணிகளைச் சுவீகரிப்பதற்குச் சபையால் நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. ஆகவே காணி உரிமையாளர்கள் உடனடியாகச் சபையுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள்.

த. நவரத்தினராசா
செயலாளர்
நகரசபை, சாவகச்சேரி.

நகரசபை அலுவலகம்,
சாவகச்சேரி,
19. 06. 1989.

(சி/ 2715)


# வெளிநாட்டு வேலைவாய்ப்பு

● ஜைப்பான்

| | |
|---|---|
| பாதுகாப்பு உத்தியோகத்தர் (Security Guard) (ஆங்கில அறிவு அவசியம்) | 30 பேர் தேவை |
| தச்சு வேலையாள் | 10 " " |
| மேசன் வேலையாள் | 15 " " |
| Accountant | 01 |

உடனடியாகத் தொடர்பு கொள்ளவும்:
காலை 9.00 மணி தொடக்கம்
பிற்பகல் 3.00 மணி வரை.

**International Travels Group (Pvt) Limited**
No. 7, Nandana Gardens Colombo-4.
Sri Lanka.
Tel: 584900.

கிளை:
13, ஆஸ்பத்திரிவீதி,
கொட்டடி, யாழ்ப்பாணம்.
[சி-2881]


# 6ஆம் மாத நினைவஞ்சலி



## கிருஷ்ணபிள்ளை கிரிதரன்

மலர்வு: 16- 08- 1968
உதிர்வு: 24- 01- 1989

மன்னவனே நீ! மாண்டவிதம் எப்படியோ?
செந்திருவே நீ! செப்பிடமாட்டாயோ?
நீ மாண்டவிதம் கண்டு நாம் பதறிவிட்டோமே!
கிரி என்று அழைத்தவுடன் கிண்கிணி சிரிப்பொலிதான்
கிரி நீ! எம்மை கிலிகொள்ள வைத்தாயோ?
செம்மலே நீ! சீர்மைவந்தும் மாயமாய்ப் பறந்தாயோ?
நீ மாயமாய்ப் பறந்து சென்று மன்னவனாய் மாறினாயோ?
செல்வனே நீ! சென்ற இடம் செப்பாயோ?
புன்னகையின் பிறப்பிடமே நீ! புகுந்தஇடம் எங்கேயோ?
நீ புகுந்த இடம் கண்டு நாம் புழுங்கி விட்டோமே!
மாதாவை மறந்தாயோ? பிதாவை மறந்தாயோ?
உடன்பிறப்பை மறந்தாயோ? உற்றாரை மறந்தாயோ?
எங்களையும் மறந்தாயோ? உன் உடம்பையும்
ஏன் மறந்தாய்?
தாரணனே! தாமரனே! தனிவழி போனாயோ?
எங்களையும் விட்டோட ஏன் மனம் ஏவியது?

எந்நாளும் உன் பிரிவால் நினைந்து துயருறும்:
அப்பா, அம்மா, சகோதரர்கள்,
உறவினர்கள், நண்பர்கள்.

கொம்பியடி லேன்,
யாழ்ப்பாணம். (956)


பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் கும்பாபிஷேக விழாக் காணும் இந்நாளில் பக்த கோடிகள் அனைவரும் அல்லல் நீங்கி இன்பம் பெற்றுய்ய நாமும் இறைஞ்சுகின்றோம்!

★ மாபிள்ஸ் ★
281-D. மணிக்கூட்டு வீதி,
யாழ்ப்பாணம்.

★ ரெருசோ ★
மூலப்பொருள்கள் விற்பனை
✶ வெளிநாட்டு சிப்ஸ் ✶ கலர் பவுடர் வகைகள் ✶ வெள்ளைச் சீமெந்து
✶ மற்றும் தேவையான பொருள்கள்
ரெருசோ மாபிள் பதிகரும் வேலை செய்து கொடுக்கப்படும்.
[சி- 2882]



**JAFFNA COLLEGE,
INSTITUTE OF TECHNOLOGY**
VADDUKODDAI.

# NEW ADMISSIONS

JULY 1989 இல் ஆரம்பிக்கப்படும் சகல பயிற்சி நெறிகளுக்குமான நேர்முகப் பரீட்சைகள் 26- 06- 1989, 27- 06- 1989 திகதிகளில் காலை 9. 30 மணி தொடக்கம் எமது நிறுவனத்தில் நடைபெறும்.

விண்ணப்பதாரிகள் அனைவரும் சான்றிதழ்களுடன் தவறாது சமுகம் தருமாறு வேண்டப்படுகின்றார்கள்.

மட்டுப்படுத்தப்பட்ட எண்ணிக்கையில் மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படுவதால் குறிப்பிட்ட தினங்களில் சமுகமளிக்கவும்.

- DIRECTOR

(C/2870)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புனர்வாழ்வு வேலைகளுக்காக

# ரூபா 12 இலட்சம்

## அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கடந்த மாதம் வழங்கியது

யாழ்ப்பாணம், ஜூன் 21

புனர்வாழ்வு வேலைகளுக்காக அகதிகள் புனர்வாழ்வுக் கழகம் கடந்த மாதம் 12 லட்சம் ரூபாவை வழங்கியுள்ளது:

மேமாதம் இக்கழகம் மேற்கொண்ட அபிவிருத்தி வேலைகள் குறித்து கழகம் விடுத்துள்ள அறிக்கையில் மேற்கண்ட தகவல் வெளியானது.

விவரம் வருமாறு:-

பாடசாலை அபிவிருத்திக்கு ரூ. 1, 35, 205.

வன்முறையால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ரூ.4,00,305.

குடிசைகள் அமைப்பதற்கு ரூ. 64, 790.

பலாலி விமான நிலைய விஸ்தரிப்பால் இடம் பெயர்ந்தவர்களுக்கு ரூ. 1, 49, 369.

செட்டிக்குளம், மன்னார், உருத்திரபுரம், ஞானசம்பந்தர் இல்லத்துக்கு ரூ. 80, 783.

கிளிநொச்சியில் உள்ள அநுராதபுர அகதிகளுக்கு ரூ. 3, 13, 047.

வைத்திய உதவிகளுக்கு ரூ. 17, 028.

குருகுலம் ஊற்று குடியேற்றத் திட்டத்துக்கு ரூ.59, 341.

இமையாணன் விரகத்தி மட்பாண்ட தொழிலாளர்களுக்கு ரூ. 62, 700. (இ-3)

## உணவு முத்திரை

கரவெட்டி, ஜூன் 21

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்கு உட்பட்ட கூட்டுறவுச் சங்கக் கிளைகளில் உணவுமுத்திரைகள் வழங்கப்பட்டு வருகின்றன. (ச-70)

## சுட்டுக் கொலை

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பு மண்டூர் கிராமத்தில் இரு இளைஞர்கள் இனந்தெரியாத நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பி. கணபதிப்பிள்ளை (18 வயது) பி. குகேந்திரன் (18 வயது) ஆகியோரே சுட்டுக் கொல்லப்பட்டவர்கள் ஆவர். (ச - 21)

## இந்தியப் படைகள்

# தமிழருக்கு பாதுகாப்பு அளித்த பின்பே வெளியேற வேண்டும்

## கம்யூ. கட்சித்தலைவர் குப்தா கூறுகிறார்

புதுடில்லி, ஜூன் 21

இலங்கைத் தமிழர் தம்மைத் தாமே பாதுகாத்துக் கொள்ள இந்தியப்படை தமிழருக்குப் பயிற்சியும் பிற வசதிகளையும் செய்து கொடுத்து விட்டு வெளியேற வேண்டும்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களில் ஒருவரான இந்திரஜித் குப்தா முன்கண்டவாறு தெரிவித்தார்.

இந்தியாவில் நாடாளுமன்றத் தேர்தல் வருவதால் தமிழ்நாட்டில் வாக்குகள் பெறும் நோக்கில் பிரதமர் காந்தி இலங்கையில் இருந்து அமைதிப் படையை விலக்கிக் கொள்ளமாட்டார் என்று திரு. இந்திரஜித் குப்தா சொன்னார். (இ-எ)

## ஐக்கிய நாணய சமாசம்

வலிகாமம் வடக்குப் பிரதேச ஐக்கிய நாணய சங்கங்களின் சமாசத்தின் அங்குரார்ப்பணக் கூட்டம் தெல்லிப்பழை பல நோக்கு கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் 25ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9.30 மணிக்கு நடைபெறும்

யாழ் மாவட்ட தே. கூ. சபைத் தலைவர் திருசி. சிவ: மகாரசா பிரதேசசமாசத்தின் அவசியம்பற்றிசிறப்புரைவழங்குவார்.

பிரதேச சமாசம் அமைத்தல் பற்றிய தீர்மானம் இக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும். (ச)

## புவியியலாளன் வெளியீட்டு விழா இன்று

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் புவியியலாளன் வெளியீட்டு விழா இன்று புதன்கிழமை மாலை 3-00 மணிக்கு யாழ் பல்கலைக்கழக இராமநாதன் மண்டபத்தில் யாழ் பல்கலைக்கழக புவியியற் கழகத் தலைவர் திரு. கே. தர்மலிங்கம் தலைமையில் நடைபெறும்,

விழாவை யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் பேராசிரியர், துரைராசா மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பார்.

யாழ் பல்கலைக்கழக புவியியற்துறைத் தலைவர் பேராசிரியர் பொன் பாலசுந்தரம் பிள்ளை நூலைஅறிமுகம் செய்து வைக்க யாழ் பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் என். பாலகிருஷ்ணன் சஞ்சிகையை வெளியிட்டு வெளியீட்டுரை வழங்குவார்

கலாநிதி வி. நித்தியானந்தன், கலாநிதி சபா. ஜெயராசா ஆகியோர் ஆய்வுரை வழங்குவார்கள். (ச)

## பட்டி மன்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ். பல்கலைக்கழக தமிழ் மன்றம் பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் பட்டி மன்றம் ஒன்றை இன்று புதன்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடத்த ஏற்பாடு செய்துள்ளது:

"இன்றைய சமுதாயத்துப் பெண்கள் பாரதி கண்ட புதுமைப் பெண்களா?" என்ற தலைப்பில் பட்டி மன்றம் நடைபெறும். (அ-9)

## கொடி வாரம்

யாழ்ப்பாணம், ஜூன்21

தெல்லிப்பழை விழிப்புலவலுவிழந்தோர் வாழ்வகத்தின் வளர்ச்சிக்காக இம் மாதம் 23 ஆம் திகதி முதல் 29 ஆம் திகதி வரை கொடி வாரம் கொண்டாடப்பட இருக்கிறது:

இவ் வாழ்வகத்தை மேலும் விரிவுபடுத்தி கூடுதல் உதவிகளை விழிப்புலவலுவிழந்தோருக்கு அளிக்கும் வகையில் இக் கொடி வாரம் நடத்தப்பட இருக்கிறது. (இ-3)

## பஸ்களுக்கு புதிய காப்புறுதி

கொழும்பு, ஜூன் 21

பஸ்களுக்கு இனிமேல் நாசகாரச் செயல்களால் ஏற்படும் பாதிப்புக்களுக்கும் பாதுகாப்புக் காப்புறுதி வசதி செய்யப்படும்.

இதுவரை இந்த வசதி இருக்கவில்லை பஸ்களுக்கு இப்போது சேதம் விளைவிக்கப்படுவதால், அரச தனியார் பஸ்களைப் புதிய காப்புறுதித் திட்டத்தின் கீழ் கொண்டு வர முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு பஸ்ஸின் மொத்தப் பெறுமதியில் ஒரு சத வீதத்தை மாதாந்தம் செலுத்தி இந்தக் காப்புறுதியில் சேர்ந்து கொள்ளலாம் என அறிவிக்கப்பட்டுள்ளது. (அ)

## மட்டக்களப்பில்

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் இந்தியப் படை - குடிமக்கள் தொண்டர்படை ஆகியவை இணைந்து செயற்படுகின்றன.

சோதனை, தேடுதல், ரோந்துப்பணிகளில் இவர்கள் இணைந்து செயற்படுகிறார்கள். (இ-11)

# ★ கொடக் "கண்டு களியுங்கள்" போட்டி ★

## மூன்றாவது இருவாராந்தச் சீட்டிழுப்பில் வெற்றியீட்டியோர்

1. எஸ். சி. தர்மவன்ச, 23, சமுத்ராசன்ன வீதி, கல்கிசை.
2. சாலுக நிஷந்த பத்திரண, 60/2, 'அனுராதா' அமுனுகம, குன்னபன கண்டி.
3. எம். எல். ஆயிஷா, 151/1, புவக்கொடமுல்ல, பதுளை.
4. எம். ரி. மொகமட் அலி, 640பி, வல்கம, மல்வானை.
5. ஏ. விதாரண (3792), புடைவை ஆலை, பூகொடை.
6. ஜி. அதிகாரி ஆராச்சி, 98, கரந்துபத்த, கேகாலை.
7. ஜி. மொனிக்கா துஷாரி பிரியதர்ஷனி, ஆர்/தந்தெனிய வித்தியாலயம், ஒபநாயக்க.
8. டி. எஸ். ஏ. சிரிசேன, 200/22பி, பேராதனை வீதி, கண்டி.
9. துஷ்யந்தி மனோரி நிஷங்க, ஸ்டேஷன் வீதி, முகலன்கமுவ, சீதுவை.
10. பி. ரமணி வசந்தா 'லக்சிறி' ஹெட்டிப்பொல வீதி, குளியாப்பிட்டி.
11. நாலக பிரசன்ன, 7, மிஹிந்து மாவத்தை, றம்புக்கனை.
12. உத்பல கொடக்கந்த, 2/84, மஹியங்கனை வீதி, பதுளை.
13. ஆர். சி. ரணசிங்க, 4பி, 11ஆர், வீடமைப்புத்திட்டம், ரத்தொளுகம.
14. எஸ். நிஹால் ரத்னபால, தல்கட, பரசஸ்தொட்ட.
15. சஜீவனி ஜயவர்தன, மே/பா, ஜயவர்தன மரவாலை, 70, ஜேத்தவன வீதி, கொழும்பு-14.
16. பி. கஜேந்திரன், 64/68, கிறீன் வீதி, கொழும்பு-13.
17. சம்பா குமாரி கொவின்ன, 219, வாட் பிளேஸ், கொழும்பு-7.
18. ரஞ்கித் பிரேமசிரி குணசேகர, 272, 'பிரீதி' நூப்பே, மாத்தறை.
19. டபிளியூ. டி. ஜனக லலித் ஜயசேன, கொமாண்டோர் றெஜிமென்ட், இராணுவ முகாம், கனேமுல்லை.
20. ஆர். எச். பி. நவரத்ன, மே/பா. நந்தசேன, தெமட்டகொல்ல, வெல்லாவ.
21. திலானி அமரசிங்க, 12/1, ஆனந்த பாலிகா மாவத்தை கோட்டே.
22. அஜித் பிரசன்ன குணதிலக, 56/5, மொறொந்துடுவ, வாதுவை.
23. ஸ்ரீனிகா ஹெட்டியாராச்சி, தெனகமுவ பொல்காவலை.
24. கீதக விக்கிரமசிங்க, 119, பிரதான வீதி, கேகாலை.
25. புபுது மதுஷிகா நிமல்சந்திர 144, ராஜமாவத்தை இரத்மலானை.
26. சஞ்ஜீவ ஜயசுந்தர 114/2C, சுமங்கல மாவத்தை குருநாகல்.
27. சத்துராங்கனி சத்குமார 10, தர்மபால மாவத்தை குளியாப்பிட்டி.
28. எஸ். கருணாரத்ன 627, மருதானை வீதி, கொழும்பு 10.
29. ரெக்ஸ் ஹரிஸன் 'சுமாலி' மாரவில.
30. அனுர அசோக இம்புல்பிட்டிய உடஹாகெதர, பஹல குட்டப்பிட்டிய பெல்மதுல்ல.
31. பி. எஸ். ஜயசிங்க 2, நெலும்புர வீதி, இரத்மலானை.
32. பி. ஐரின் பெரேரா, 29/15, யஹம்பத் மாவத்தை, மஹரகம.
33. நிஹால் ராமநாயக்க, ரொத்தும்ப, மாத்தறை ஊடாக.
34. எமில் கூரே, வான் தொடர்பு நிலையம், விமான நிலையம், இரத்மலானை.
35. பாத்திமா இஸ்மாயில், 46, கலகெதரவத்தை, மொரவின்ன, பாணந்துறை.
36. கருணாதிலக அத்தபத்து. 'தயாசிறி', தவமொட்டாவ, ஆண்டியம்பலம.
37. அத்துல டி சில்வா, 15, ஜயந்திபுர, பத்தரமுல்லை,
38. ஜே. என். பெர்னாண்டோ, போட்டோ ஸ்டார் A/1 பஸ் நிலையம், சு. வ. வ., கட்டுநாயக்க.
39. பின்னுவாலா பெரேரா, 11/1, லோங்டன் டெரஸ், கொழும்பு-7.
40. வி. அருணாச்சலம் கவிதா, புத்தூர் மேற்கு, நாவற்கிரி.
41. பி. ஏ. அனுர கித்சிறி, 73, திருகோணமலை வீதி, மட்டக்களப்பு.
42. கனிஷ்கா கங்கந்த, 19, வித்தியாலய மாவத்தை, பெல்மதுல்ல.
43. அசோக எல்லேபொல, 64, 5ம் ஒழுங்கை, மல்கடுவாவா, குருநாகல்.
44. ஹேமசிரி ரணதுங்க ஆராச்சி, 69/1பி, கல்ஹேனவத்தை, கனேமுல்லை வீதி, கடவத்தை.
45. ஏ. ஜி. நிமால் கருணாதிலக, மே/பா: ஏ. எம். ஜயசுந்தர பண்டா, திராகம, கோகிலகெதர, குருநாகல்.
46. சி. நாணயக்கார, 11/2, கொட்டுகொடல்ல வீதி, கண்டி.
47. எட்வேட் ஒபயசேகர, பெட்டிகல வீதி, பலாங்கொடை.
48. ஹேமமாலினி பத்திரண, 20, ஸ்டேசன் வீதி, எகொட உயன, மொரட்டுவை.
49. ஆர். ஜயசேகர, 111/14, பெனதியகரவத்தை, மாவித்தர, பிலியந்தலை.
50. குசுமா ரத்நாயக்க, புதல்வல்ஹேனவத்தை, கல்லஹர, லோகஹெட்டிய.
51. சமன் அமரசேகர, 365/6, ஆர். ஏ. டி மெல் மாவத்தை, கொழும்பு 3.
52. எச். டபிள்யூ. நெலுகா குமாரி, 11/38, பெல்லந்தர வீதி, தெஹிவளை.
53. பி. றெஜினோல்ட் பெர்ணாண்டோ, எஸ். எல். ஆர். பி. என். என். இல்லம், நாகொட, களுத்துறை.
54. ஜனக விமலதர்ம, தேயிலை ஆராய்ச்சி நிலையம் தலவாக்கொல்லை.
55. எம். இஸட் எம். நிஸாம், 265, பிரதான வீதி, இரத்தினபுரி
56. நிஷாந்த திலகரத்ன, 22ஆம் படைப்பிரிவு, சிக்னல் நிலையம், திருகோணமலை மே/பா. விமானப்படை வான்தபால் த. பெ. 553, கொழும்பு-3
57. டி. ஆர். ரொமேஷ் சேவியர், ஜெனரல் டிரேட் ஏஜென்ஸீஸ் லிமிட், 193, மின்நிலைய வீதி, யாழ்ப்பாணம்
58. பீ. பி. திஸாநாயக்க, 99, அஸ்கிரிவல்பொல, உடுகம்பொல.
59. ஏ. ஏ. குணதாச, 98, கரந்துபத்த, கேகாலை
60. எம். ஏ. கருணாதிலக, த. பெ. 3, பலாங்கொடை
61. பிரசங்க அபேசேகர, 30/1, அபேசேகர வீதி, நீர்கொழும்பு
62. என். வி. கருணாதிலக, விந்தியா றெக்கோட் பார், தெரணியாகலை
63. பி. அருள்நாயகம், கலாசாலை வீதி, திருநெல்வேலி, யாழ்ப்பாணம்
64. தலதா அமரதாச, 75, ராஜவீதி, மாத்தளை.
65. எச். சி. பெர்ணாண்டோ, 817, கடவத்தை வீதி, ருகம.
66. வி. ஏ. றெஜினோல்ட், 'றெஜினு' தலைமன்னார் மேற்கு, தலைமன்னார்.
67. யுவானி தம்பு, 35/3, ஹோர்டன் பிளேஸ், கொழும்பு 7.
68. எச். எம். கருணாசேக, 297, 'மெக்கா' யூனியன் பிளேஸ், கொழும்பு 2.
69. பியசேன பிரேமரத்ன, 130, ஸ்ரீ விக்கிரம மாவத்தை, கொழும்பு 15.
70. ரசிக சமந்த குமார விக்கிரமசிங்க 'விக்கும் விலா' கெலஸ்கமுவ, ஹல்தொட்ட
71. என். பி. சிறிநாத் பத்திரண, 138, நீர்கொழும்பு வீதி, வத்தளை.
72. ஜி. சித்ரா நிமால் சாந்த சில்வா, திஸ்ஸ மாவத்தை, மகாவெவ.
73. மங்கள வீரசேகர, 25, பௌத்த நிலைய வீதி, வராகொட, களனி.
74. எம். ஆர். பெரேரா, 24, தித்தபத்தர.
75. சங்கதாச கப்புதுவ, 20/6, பி. பீ. அல்விஸ் பெரேரா மாவத்தை, கட்டுபெத்த, மொரட்டுவை.
76. பி. சிவபாலன், ஊரெழு கிழக்கு, சுன்னாகம்.
77. எஸ். டி. ஹிரஞ்சன், 77, துட்டகைமுனு வீதி, தெஹிவளை.
78. ஆசிரி தர்மரத்ன, 273/11, பியகம, மல்வானை.
79. வீரசேன புஞ்சிஹேவ, நியூ ஆர்ட் ஸ்ருடியோ, திக்வெல்லை.
80. பியதிஸ்ஸ வீரசிங்க ஆராச்சிகே, 487/2, தலங்கம வடக்கு, தலங்கம.
81. எஸ். சிவதர்ஷனி, 42, விபுலானந்தர் வீதி, புங்கன்குளம், யாழ்ப்பாணம்.
82. ஜி. ஏ. ஜனக நந்தன பெரேரா, 51/3, பழைய வீதி, நாவின்ன, மஹரகம.
83. கே. சுஸந்த பெரேரா, 117, குடாஹக்கப்பொல வடக்கு, ஜா எல.
84. ஏ. பி. டி. சில்வா, 101, நுவரெலியா வீதி, தலவாக்கொல்லை.
85. டபிள்யூ. எஸ். சந்திரசிறி, பி. ஸி. 25131, பொலீஸ் நிலையம், அம்பலாந்தோட்டை.
86. அயிஷா ஹிரத்திகா பெர்ணாண்டோ, 24/2, சப்புவத்தை, பொல்காவலை.
87. ஆர். எம். பி. ரன்பண்டா, 'சஞ்ஜய', அம்போகம, கல்கமுவ.
88. அனுருத்திகா கீதாஞ்சலி, புவனேபாகு, ஸ்டுடியோ தீப்தி போட்டோ, ரத்கம.
89. ஷலீந்திர சொய்ஸா, 19, பெதஸ்டா பிளேஸ், கொழும்பு-5.
90. ரொஹான் ஜயதிலக, 7, 3ஆம் ஒழுங்கை, 'மானெல்' கொஸ்வத்தை வீதி, நாவலை, ராஜகிரிய.
91. ஜனக சஞ்ஜீவ, 'விஜய வாசா' நிப்பட்டுமுனுவ, ஹெட்டிமுல்லை, கேகாலை.
92. ஆர். எம். எம். அஜித் ராஜகுரு, மாதன, யட்டகம, றம்புக்கனை.
93. டபிள்யூ. ஏ. சுவர்ண ஜயந்தி, 107, கந்தலியத்தபாலுவ, கனேமுல்லை.
94. பி. கமால் செனவிரத்ன, காஞ்சன ஸ்டோர்ஸ் 113, பிரதான வீதி, கேகாலை.
95. ஏ. ஆர் பாலித, புதிய பேராதனை கரமட, கெலி ஓயா.
96. இந்திராணி விஜேசுந்தர, 'தெல்ஷான்' மீவத்துர, பேராதனை.
97. எஸ். எஸ். சந்திமா உதயாங்கனி, ரேகா ஸ்டுடியோ, திஸ்ஸமகாராம.
98. தரங்கா ஜயசிங்க, 2/18, 1ஆம் ஒழுங்கை, எகொடவத்தை பொரளஸ்கமுவ.
99. ரூபி மிராலோ, சர்வோதய, மொரட்டுவை.
100. எஸ். எஸ். ஜயசேகர, மே/பா எல். ஏ. பெர்ணாண்டோ, 1ஆம் குறுக்குத் தெரு, பாகொடை, நுகேகொடை.

இலங்கையில் கொடக் பொருள்களை

விநியோகிக்கும்:

மில்லர்ஸ் லிமிட்டெட்

PRODUCTS BY Kodak

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

17 வயதுக்கு உட்பட்டோர் கிரிக்கெட்:

# சென்.ஜோன்ஸ் அணி வெற்றி

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் மாவட்டப் பாடசாலைகள் கிரிக்கெட் சங்கத்தினால் நடத்தப்படும் கிரிக்கெட் போட்டியில் சனிக்கிழமை நடைபெற்ற 17 வயதுப் பிரிவினருக்கான போட்டி ஒன்றில் சென் பற்றிக்ஸ் கல்லூரியை எதிர்த்து ஆடிய சென். ஜோன்ஸ் கல்லூரி அணி முதலாவது இன்னிங்கில் வெற்றியீட்டியது.

சென் ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சென். பற்றிக்ஸ் கல்லூரி 84 ஓட்டங்களுக்குச் சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

எஸ் விஜேந்திரா 39 ஓட்டங்களைப் பெற்ருர். சிறப்பாகப் பந்து வீசிய பி. சிவமாறன் 21 ஓட்டங்களை விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர். கே. பிரசாந்தன் 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

தொடர்ந்து ஆடிய சென் ஜோன்ஸ் கல்லூரி அணி 194 ஓட்டங்களுக்கு 8 விக்கெட்டுக்களை இழந்த நிலையில் ஆட்டத்தை நிறுத்திக் கொண்டது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர்களான எஸ். சுதேஸ், எஸ். சுரேன்குமார் ஆகியோர் இணைந்து வெகு சிறப்பாக ஆடி முதலாவது விக்கெட் இழப்புக்கு 102 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது.

எஸ். சுதேஸ் 71, எஸ். சுரேன்குமார் 41, ரி. இன்பன் 25, பி. சிவமாறன் ஆட்டமிழக்காமல் 15, கே. பிரசாந்தன் 14 ஓட்டங்களைப் பெற்றனர்.

பந்துவீச்சில் இ. அந்தனிப்பிள்ளை, ஜே. இம்மானுவல் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினர்.

இரண்டாவது இன்னிங்சில் சென். பற்றிக்ஸ் அணி ஆட்ட நேர இறுதியின்போது 114 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

சதாநந்தன் 20, பி. பாஸ்கரச்சந்திரன் 19, ஜே. ஆர். வன்னியசிங்க, எஸ். விஜேந்திரா ஆகியோர் தலா 17, ஆர். பிரதீபன் 13 ஓட்டங்களைப் பெற்றனர்.

சிறப்பாகப் பந்து வீசிய அணியின் ஆரம்பப் பந்து வீச்சாளர் பி முரளி 61 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுக்களைக் கைப்பற்றினுர். (இ-6)

### விளையாட்டு அரங்கு


★கொம்பியூட்டர் பயிற்சி★

மல்லாகத்தில்!!

Basic Programming Course

22 - 06 - 89 [4. 30 p.m.]

யாழ் நகரில்!!

19 - 06 - 89 [9. 00 a m.]

IDP COMPUTER CENTRE

342, K. K. S. ROAD,

JAFFNA.

(சிவன் கோயிலடி)

Branch: 7th MILE POST, MALLAKAM.

(C/2709)


# சென்.ரேக் வென்றது

யாழ்ப்பாணம், ஜூன் 21

மண்டைதீவில் அமரத்துவமடைந்த 31 மீனவர்களின் ஞாபகார்த்தமாக குருநகர் புனித சூசையப்பர் விளையாட்டுக்கழகம் பாடும்மீன் விளையாட்டுக்கழகத்தின் அனுசரணையுடன் நடத்திய (பி) பிரிவுக்கான உதைபந்தாட்டப் போட்டியில் சென்ரேக் விளையாட்டுக்கழகம் சம்பியன் கேடயத்தைக் கைப்பற்றிக் கொண்டது.

சனிக்கிழமை குருநகர் விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் சென். மேரிஸ் அணியை எதிர்த்து ஆடிய சென்ரேக் விளையாட்டுக்கழகம் 1:2 என்ற கோல் கணக்கில் வெற்றியீட்டியது.

சென்ரேக் அணிக்கான கோல்களை கொலின்ஸ், தர்மகுலசிங்கம் ஆகியோரும்சென். மேரிஸ் அணிக்கான கோலை மைக்கல் கொலின்சும் பெற்றுக்கொடுத்தனர்.

இப்போட்டியின் பிரதம மத்தியஸ்தராக பிரான்சிஸ் உதவி மத்தியஸ்தர்களாக செபஸ்தியாம்பிள்ளை, விமலதாசன் ஆகியோரும் கடமையாற்றினர்.

இப்போட்டியில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்ட குருநகர் பங்குத்தந்தை பி. எம். இமானுவேல் அடிகளார் வெற்றி பெற்ற அணிகளுக்கான வெற்றிக்கிண்ணங்களை வழங்கினுர்.

இறுதிப்போட்டிக்கு முன்னதாக நடைபெற்ற காட்சி உதைபந்தாட்டப் போட்டியில் தெல்லிப்பளை தெரிவுக் கோஷ்டியை எதிர்த்து ஆடிய படும்மீன் விளையாட்டுக் கழகம் 0: 2 என்ற கோல்கள் வித்தியாசத்தில் வெற்றியீட்டியது.

பாடும் மீன் விளையாட்டுக் கழகத்துக்கான கோல்களை எல். மில்லர், துரை ஆகியோர் பெற்றுக்கொடுத்தனர். (இ- 6)

## பதவி உயர்வு

யாழ்ப்பாணம் ஜூன் 21

யாழ் உள்ளூராட்சித் திணைக்களத்தில் எழுது வினைஞராகக் கடமையாற்றிய திரு. எஸ். இராமச்சந்திரன் கிளிநொச்சி உள்ளூராட்சித் திணைக்களத்திற்கு நிர்வாகஉதவியாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்கிருர். (க - 13)

# எக்ஸ் - ரே படம் தேவையில்லை

## மார்புநோய்ச் சிகிச்சைக்கு வருவோருக்கு அறிவுறுத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ்ப்பாணம் மார்பு நோய் சிகிச்சைப் பிரிவில் மருத்துவ பரிசோதனைக்கு வருபவர்கள் எக்ஸ் - ரே படம் கொண்டு வரத்தேவையில்லை என அறிவிக்கப் பட்டுள்ளது.

மருத்துவ பரிசோதனைக்கு உட்படுத்தப்படுவோருக்கு சயரோக வியாதி இருப்பதாக சந்தேகிக்கப்படும் பட்சத்திலேயே எக்ஸ் - ரே படம் தேவைப்படும் என வைத்தியப் பொறுப்பதிகாரி தெரிவித்துள்ளார்.

மார்பு நோய்ச் சிகிச்சைப் பிரிவுக்கு பரிசோதனைக்கு வருவோரிடம் எக்ஸ் - ரே படம் கோரப்படுவதால் நோயாளிகள் பெரும் இன்னல்களை எதிர் நோக்கி வந்தனர். அத்துடன் மருத்துவப் பரிசோதனை முடிவுகள் வெளிவருவதிலும் கால தாமதம் நிலவி வந்தது. (இ-10)

# ஒப்பந்தம் நிறைவேறாத நிலையில் இந்தியப்படை வெளியேறக்கூடாது

## வவுனியா ஊர்வலம் முடிவில் உரை

வவுனியா ஜூன் 21

அமைதி, ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்படாத நிலையில் தமிழர்களின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமல், இந்திய அமைதிப் படையை இங்கிருந்து வெளியேற்றுவதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை இந்தியப் பிரதமர் ராஜீவ்காந்தி முறியடிக்க வேண்டும்.

அமைதிப்படை வெளியேற்றத்தை ஆட்சேபித்து வவுனியாவில் நடைபெற்ற ஊர்வலத்தின் முடிவில் உரையாற்றிய திரு. பிரதாப் (ஈ.பி. ஆர். எல். எவ்) மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும் அங்கு தெரிவித்ததாவது:

தமிழீழத்துக்காகபோராடிய இயக்கங்களிடையே பிளவு ஏற்பட்டு, ஆபத்து நிறைந்த காலகட்டத்தில் இந்தியா தலையிட்டதன் பேரில் இலங்கை இந்திய அமைதி ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது.

இதில்தமிழரின் சார்பில் இந்தியப்பிரதமர் திரு ராஜீவ் காந்தி கையெழுத்திட்டார்.

ஒப்பந்தம் சரிவர நிறைவேற்றப்படாத இந்த வேளையில் தமிழரின் பாதுகாப்பு உறுதிப்படுத்தப்படாமல் இந்திய அமைதிப்படை இங்கிருந்து வெளியேறக் கூடாது.

அமைதிப்படை வெளியேற்றத்திற்குமேற்கொள்ளப்படும் முயற்சிகளைப் பிரதர்மராஜீவ் காந்தி முறியடிக்க வேண்டும் என்று வவுனியா மக்கள் மகஜர் மூலம் கேட்டுக் கொள்கின்றூர்கள்''

இவ்வாறு அவர் தெரிவித்தார்.

(இ-164)

## பாஷையூரில் நாட்டுக் கூத்து

யாழ்ப்பாணம், ஜூன் 21

பாசையூர் புனித அந்தோனியார் திருவிழாவின் சிறப்பு நிகழ்ச்சியாக 23 ஆம் திகதி வெள்ளிக் கிழமை மாலை 8 00 மணிக்கு பாஷையூர் புனிதஅந்தோனியார் ஆலய முன்றலில் ''யோசேவாஸ்'' என்னும் நாட்டுக் கூத்து மேடையேற்றப்படும்.

யாழ் ஆயர் மேதகு கலாநிதி வ. தியோகுப்பிள்ளை ஆண்டகை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொள்வார்.

பங்குக் குரவர் அருட்திரு ஜே. ஏ. பிரான்சிஸ் அடிகளார் தலைமையில் நாடகம் மேடையேற்றப்படும். (ச)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

யாழ்ப்பாணம்,ஜூன் 21

யாழ் நற் சனசமூக நடுநிலையம் 1988 ஆம் ஆண்டு நடத்தியசமூக தலைமைத்துவப் பயிற்சி நெறி பயிலுனருக்கு சான்றிதழ் வழங்கும் வைபவம் 24 ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 30மணிக்கு நடைபெறும்.

யாழ்ப்பாணம் நான்காம் குறுக்குத் தெருவில் அமைந்திருக்கும் நடுநிலையத்தில் நடைபெறவுள்ள இவ் வைபவத்துக்கு அருட்திரு கலாநிதி எஸ். ஜே. இம்மானுவில் தலைமை வகிப்பார். (ச)

# கல்முனை மத்திய கோத்தணியில்

## ஒரு பாடசாலையிலேயே மதிய உணவு!

கல்முனை ஜூன் 21

கல்முனை மத்திய கொத்தணியைச் சேர்ந்த பதினெரு பாடசாலைகளில் ஒரே ஒரு பாடசாலையில் மாத்திரமே மாணவர்களுக்கு பகல் உணவு வழங்கப்படுகின்றது.

அதுவும் மற்ற மாவட்டங்களிலுள்ள பாடசாலைகளில் வழங்கப்படுவது போன்ற உணவு இங்கு வழங்கப்படுவதில்லையென புகார் செய்யப்படுகின்றது.

கல்முனையிலுள்ள பிரதான கல்லூரிகளில் ஒன்ருன உவெஸ்லிக் கல்லூரியே உணவு வழங்கப்படும் பாடசாலை ஆகும். ஏனைய பாடசாலைகளின் அதிபர்கள் கல்முனை பிரதம கல்வி அதிகாரியையும் அம்பாறை மாவட்ட கல்விப்பணிப்பாளரையும் சந்தித்து நிலைமையை விளக்கினர்.

உணவு வழங்குவதற்கான பணம் கல்முனை கோட்டக் கல்வி அலுவலகத்துக்கு வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டதாகவும், கோட்டக் கல்வி அலுவலகம் இழுத்தடிப்புச் செய்வதாகவும் அதிபர்கள்சிலர் கவலைதெரிவித்தனர்: (இ-84)

## இடமாற்றம்

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் பிராந்திய உள்ளூராட்சித் திணைக்களத்தில் வேலைத் தள அத்தியட்சகராகக் கடமை யாற்றி வந்த திரு. எஸ். சிவசுப்பிரமணியம் தற்போது யாழ்கல்வித் திணைக்களத்திலுல், ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் அமைக்கப்படும் பாடசாலை கட்டடவேலை மேற்பார்வை அதிகாரியாக இடமாற்றம் பெற்றுள்ளார். (க - 13)

## மீண்டும் கட்டுப்பாடு

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பு இந்தியப் படையினரின் சிறைச்சாலைத் தடுப்பு முகாமில் உள்ளவர்களை உறவினர்கள் பார்வையிடுதல் மீண்டும் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஞாயிறு தோறும் வழங்கப்பட்ட அனுமதி தற்போது இரு வாரங்களுக்கு ஒரு தடவை என கட்டுப்படுத்தப் பட்டுள்ளது.

அதேநேரம் உணவுபொருள்கள் வழங்குவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது. (இ-21)

# கிளிநொச்சியில் நிவாரணம்

வட்டக்கச்சிஜூன் 21

கிளிநொச்சி இலங்கை வங்கியின் பொலீஸ் நிலையக் கிளையில் வைத்து சுமார் 300 குடும்பங்களுக்கு மீளக்குடியமர்வு, தொழில் பாதிப்பு நிவாரணம் வழங்கப்பட்டது.

இந்த நிவாரணமான 15 லட்சத்து 20 ஆயிரம் ரூபாவும் வன்னேரிக்குளம் மக்களுக்கு வழங்கப்பட்டது.

மேலும் பல கிராமங்களுக்கு அடுத்த வாரங்களில் நிவாரணம் வழங்கப்படலாம் என்று வங்கி வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (இ-163)


உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் வேலைவாய்ப்பினைப் பெறுவதற்கான கம்பியூட்டர் கல்வி

DIPLOMA IN DATA PROCESSING AND COMPUTER PROGRAMMING IN BASIC LANGUAGE

ஆரம்பம்: 24- 06 89 (சனி, ஞாயிறு) வகுப்புகள்

பயிற்சிக் காலம்: 3 மாதம்

சேரும்போது செலுத்தவேண்டியது 500 மாத்திரம். O/L படித்த இருபாலாரும் சேரலாம். குளிரூட்டப்பட்ட அறையில் கூடியநேர செய்முறைப்பயிற்சி IBM (COMPATIBLE) கம்பியூட்டரில் வழங்கப்படும். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும் குறிப்பிட்ட தொகை மாணவ, மாணவியரே சேர்க்கப் படுவார்களாகையால் விண்ணப்பப்படிவத்தைப் பெற்றுப் பதிவுசெய்து கொள்ளவும்.

விண்ணப்ப முடிவு திகதி: 23- 06- 89

UNIKCO COMPUTER CENTRE

No. 5, மின்சார நிலைய வீதி,

2ஆம் ஒழுங்கை, யாழ்ப்பாணம்.

(உபதபாற் கந்தோர் அருகாமை)

(சி/2868)



★ கம்பியூட்டர் கல்வி ★

Data Processing & Computer Programming in Basic Language

காலம்: 2 மாதம் ஆரம்பம்: 23-6-89 (Week days) 24-6-89 (Week end)

சேரும் போது செலுத்த வேண்டியது 450|- மட்டுமே

O/L படித்த இருபாலாரும் சேரலாம். IBM - Epson PC JI Computerஇல் கூடிய நேர செய்முறைப் பயிற்சி வழங்கப்படும். ஒவ்வொரு மாணவ மாணவியரும் தனிப்பட்ட கவனம் பெறுவர். பயிற்சி முடிவில் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் வழங்கப்படும்.

ABLE

ABLE TECHNICAL STUDIES

Post Office RD, Chavakachcheri. (SCIENCE CENTRE)

K.K.S. Road, Jaffna. (இந்துக்கல்லூரிக்கு அருகில்)



கம்பியூட்டர் பயிற்சி

BASIC - LANGUAGE

வல்வெட்டித்துறை

நெடிய காட்டில் அடுத்த பயிற்சி எதிர்வரும் 01- 07- 1989 ஆம் திகதி காலை 10 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

விபரங்கட்கு: நெடிய காட்டில்இருக்கும் கண்ணனைத் தொடர்பு கொள்ளவும்.

—மகா

(9533)


## இரண்டாவது ஆண்டு நினைவஞ்சலி



செல்வி ராதாமணி கனகசெந்திநாதன்

பிறப்பு: 25 - 08 - 1959

இறப்பு: 21 - 06 - 1987

ஆண்டு இரண்டு மறைந்தாலும் உன் அன்பு நினைவு மறையாது!

உனது பிரிவால் துயருறும்:
அம்மா, அக்காமார், அத்தான்மார்,
அண்ணு, அண்ணி, அவர்தம் பிள்ளைகள்.

குரும்பசிட்டி, தெல்லிப்பழை.
21 - 6 - 89

(948)

## இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



டாக்டர் திருமதி மகேஸ்வரி அருளம்பலம்

தோற்றம்: 04 - 10 - 1929

மறைவு: 13 - 07 - 1987

திதி: 21. 06. 1989

தங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்ருேம்:

- குடும்பத்தினர்.

A. V. ரோட்,
அரியாலை.

(11305)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## பொய்யாமொழி

**குறள்:**

மயிர்நீப்பின் வாழாக் கவரிமா அன்னர்
உயிர்நீப்பர் மானம் வரின்.

**பொருள்:**

தன் உடம்பில் இருந்து மயிர் நீங்கினால் உயிர் வாழாத கவரிமானைப் போன்றவர் மானம் அழிய நேர்ந்தால் உயிரை விட்டுவிடுவர்.

உதயன்

இல: 39/3, நாவலர் வீதி, தொலைபேசி 24605 / 23071
யாழ்ப்பாணம்;
21 - 06 - 1989

# டாக்டரின் முன்மாதிரி

உயிர் ஆபத்தை எதிர்நோக்கிய நோயாளிக்கு, வேறு எந்த விதத்திலும் இரத்தம் பெற முடியாத ஒரு நெருக்கடியான வேளையில், டாக்டர் ஒருவர் தமது இரத்தத்தை வழங்கி அந்த நோயாளியின் உயிரைக் காப்பாற்றி இருக்கிறார்!

இது பத்திரிகைக்கு மட்டும் நல்ல, தரமான செய்தி என்பதல்ல. இப்பகுதி வாழ் மக்கள் எல்லோருக்கும் தெரிய வேண்டிய முக்கியமான செய்தி. உயிர் காக்கும் மனிதாபிமானம் நிறைந்த அந்தப் பிரெஞ்சு டாக்டர் பிரான்ஸிசிடம் இருந்து எம்மவர்கள் படித்துக் கொள்ள வேண்டியது நிறைய உண்டு!

ஆபத்தில், நெருக்கடியில் மற்றவர்களுக்கு உதவும் பண்பு ஒவ்வொரு மனிதனுக்கும் அவசியமான குணம்சமாகும். அந்தக் குணம்சம் இல்லாமல் மனிதாபிமானம், மனித நேயம் என்ற எதுவுமே ஒருவனது சிந்தையில் வித்தூன்றாது.

எம்மவரில் பலரும் சுயநலம் தான் வாழ்க்கை என்று நினைக்கிறார்கள். தாமும் தமது குடும்பமும், சுற்றமும் என்ற குறுகிய வட்டத்திற்குள். நின்று வாழவே விரும்புகிறார்கள். அடுத்தவர் நலனில் சிறிதேனும் அக்சறை காட்டாத குணவியல்பையே சமூகத்தில் பரக்கக்காண முடிகிறது.

நான் உண்டு, என் குடும்பம் உண்டு, என் சுற்றம் உண்டு என்ற வட்டம் கூடத் தேய்ந்து போய், நான் உண்டு, என் குடும்பம் உண்டு என்ற நிலைக்கு இப்போது குறுகிவிட்டது மேலும் வேதனைக்கு உரியது.

ஒருதாய் வயிற்றில் பிறந்த அண்ணனும், தம்பியும் ஜென்ம எதிரிகளாகி அவர்கள் உறவு நிலை அறுந்து போவது கூட இப்போது இயல்பு நிலையாகிக் கொண்டிருக்கிறது! இதற்கு மேல் எதனைச் சொல்ல...?

இத்தகைய பின்னணியில், தமது உறவினர்களின் உயிர் காப்பதற்குக் கூட. இந்த உரித்தானவர்களின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டுக்கூட இரத்ததானம் செய்ய இப்பிரதேச மக்கள் பின்னிற்பது சர்வசாதாரணமாகி விட்டது.

தானத்தில் மகத்தானது இரத்த தானம் என்று இப்பத்தியில் பல தடவைகள் எடுத்துரைத்துள்ளோம். ஓர் உயிரைக்காக்க உதவுவது. எல்லாத் தர்மங்களிலும் மேலானது. எனினும் இன்னமும் தங்கள் தாய், தந்தையருக்கு இரத்தம் வழங்க, பணத்துக்கு ஆள் பிடிக்கும் வெட்கக் கேடான நிலைமை என்பது சமூகத்தில் மாறவில்லை.

இத்தகைய ஒரு சமூகத்தின் மத்தியில் வெளிநாட்டு டாக்டர் ஒருவர், தனது நோயாளிக்கு இரத்தம் வழங்கிச் சிகிச்சை புரிந்தது ஒரு படிப்பினையாக அமைய வேண்டும். டாக்டர் பிரான்ஸிஸுக்கு சபாஷ்! அவரது மனிதாபிமான உதவியைப் பார்த்து எமது மக்கள் வெட்கப்பட வேண்டும். இனியாவது அந்த முன்னுதாரணத்தைப் பின்பற்றித் தம்மைத் திருத்திக்கொள்ள வேண்டும்.

தமிழர்கள் தொடர்ந்து குறுகிய வட்டத்திற்குள்ளேயே வாழப்பழகிக் கொண்டால் சமுதாய மலர்ச்சியும், விருத்தியும் காண முடியும் என்பது வெறும் பகற்கனவாகிவிடும்.

மற்றவனுக்கு உதவி செய்யும் தன்னலமற்ற மனப்பக்குவத்தை வளர்க்க வேண்டும். அதுவே மனிதாபிமானம் காக்கவும், மனித நேயம் பேணவும் உதவும்.

தமிழர் சமூகத்தில் அந்த இரண்டு விழுமியங்களும் விரிந்து மலர்வதற்கு முதல் அடி எடுத்து வைக்கும் விதத்தில்—

வேண்டாத மரணங்கள் மலிந்துள்ள இக்காலக்கட்டத்தில், ஆபத்தான நிலையில் உள்ளோர் உயிர்களைக் காப்பாற்ற இரத்த தானம் செய்வதற்கேனும் மனம் வைத்தல் அவசியம். எத்தனை பேர் இதனை ஒரு சவாலாகக் கருதி, அந்த உத்தம சோதனையில் ஈடுபட உளம் கொள்வர்?

## பொன்னாலை குடமுழுக்கு விழாக் காண வாரீர்!

அழகுவளர் சோலையென மிளிரும்
அருள்மிகு பொன்னாலையம் பதியில்
முழவதிரும் ஓசைமிக்க நல்ல,
முகில் வண்ணன் மணிவண்ணன்
விரும்பியுறைந்திடு நற்பதியாம்,
வினைகள் தீர்க்கும்பொற்பதியாம்
கரும்பினிய சுவை நல்கும்,
கண்ணன் நாமம் ஓதியுய்வோம்!
கார்மேக வண்ணன் அவன்
கண்ணன் பெயரைச் சொன்னால்
பூர்விகப் பாவம் எல்லாம்
நிச்சயமாய்த் தொலைந்து போகும்
பேர் சொல்லிப் புகழ்பாடிப்
பொன்னாலைக் கோயில்
சீர் மல்கு குடமுழுக்கு
நல் விழாக் காண வாரீர்!

மூளாயூர் ச. கிருஷ்ணசாமி

(பொன்னாலை ஸ்ரீவரதராஜப் பெருமாள் ஆலயக் குடமுழுக்கு விழா இன்று நடைபெறுகிறது)

---

★ பனிப்பாறையில் மோதி

# சோவியத் கப்பல் 'மக்ஸிம் கோர்க்கி' நடுக்கடலில் மூழ்குவதாக அறிவிப்பு

### 954 பயணிகளில் 325 பேர் உயிர்காக்கும் படகுகளில்

லண்டன் ஜூன் 20

சோவியத் யூனியனின் உல்லாசப்பயணக்கப்பல் 'மக்ஸிம் கோர்க்கி' நடுக்கடலில் மூழ்கிக் கொண்டிருப்பதாக நேற்று அறிவிக்கப்பட்டது.

கப்பலில் அந்தச் சமயம் 954 பயணிகள் இருந்தனர். அவர்களில் 325 பேர் உயிர் காக்கும் படகுகளில் ஏறிக் கொண்டனர்.

ஏனையோர் பனிக்கட்டி மீது நிற்கின்றனர்.

இவர்களைக் காப்பாற்ற நோர்வே மற்றும் பிரிட்டனில் இருந்தும்ஹெலிக்கொப்டர்கள் கப்பல் மூழ்கும் இடத்திற்கு விரைந்தன.

நோர்வேயில் இருந்து வடமேற்கு பக்கமாக 500 மைல் தொலைவில் நடுக்கடலில் மக்ஸிம் கோர்க்கி' கப்பல் மிதக்கும் பெரிய பனிக்கட்டிப்பாறையில் மோதியது. அதைத்தொடர்ந்து கப்பல் கடலில் மூழ்கத் தொடங்கியது.

கப்பல் மூழ்கும் தகவலை லண்டனில் லொயிட்ஸ் கப்பல் போக்குவரத்து நிறுவனம் வெளியிட்டது.

கப்பலில் பயணம் செய்தவர்களில் பெரும்பாலோர் மேற்கு ஜேர்மன் வயோதிபர்கள் ஆவர்.

பனிப்பாறை மீது நிற்பவர்களுக்கு உடனடியாக ஆபத்து ஏதும் ஏற்படாது என்று அறிவிக்கப்பட்டது. (எ)

## சீன மாதிரியான கிளர்ச்சி ரஷ்யாவிலும்இடம்பெறலாம்

க்ரொனின்ஜென், ஜூன் 20

கூடுதல் ஜனநாயகம்கோரி சீனப்பாணியிலான மாணவர் கிளர்ச்சி சோவியத் யூனியனிலும் இடம்பெறக்கூடிய வாய்ப்பு இருப்பதாக எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

சோவியத் நாடாளுமன்ற உறுப்பினரும் பிரபல மனித உரிமை வாதியும் சமாதான நோபல்பரிசு பெற்றவருமான திரு. அன்ட்ரீ சகாரோவ் இந்த எச்சரிக்கையை விடுத்திருக்கிறார். திரு. சகாரோவ் நெதர்லாந்துக்கு விஜயம் செய்தபோது இதனைச் செய்தியாளர்களிடம் தெரிவித்தார்.

நெதர்லாந்துப் பல்கலைக்கழகம் ஒன்று அவருக்குக் கௌரவ சட்டக்கலாநிதிப் பட்டம் வழங்கியது. அதைப் பெற்றுக்கொள்வதற்காக திரு. சகாரோவ் க்ரொனின்ஜென் நகர் வந்திருந்தார். (எ)

## ரஷ்யாவில் இனக்கலவரம்

மாஸ்கோ, ஜூன் 20

சோவியத் யூனியனில்உள்ள கஹஸ்தானிலும் இனக் கலவரம் மூண்டிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே உஸ்பெக்கிஸ்தானில் ஏற்பட்ட இனக்கலவரம் இப்போதுதான் தணிந்துள்ளது. (எ)

## இரேக்கப் பிரதமர் கட்சி பொதுத் தேர்தலில் தோல்வி

ஏதென்ஸ், ஜூன் 20

கிரேக்கப் பிரதமர் அன்ட்ரீஸ் பாப்பாந்திரியோ தலைமையிலான ஆளும் கட்சி நேற்று நடந்த பொதுத் தேர்தலில் தோல்வி அடைந்தது.

புதிய மக்கள் ஜனநாயகக் கட்சி வெற்றியீட்டியது.

74 வயதான பிரதமர் திரு. பாப்பந்திரியோ, தனது மனைவியை விவாகரத்துச் செய்துவிட்டு 34 வயதான பெண் ஒருத்தியை அண்மையில் திருமணஞ்செய்தார்.

இச்சம்பவம் அவரின் கட்சியின் வெற்றியைப் பாதித்து விட்டதாகத் தெரிவிக்கப்பட்டது. (எ)

## அணு ஆயுதக் குறைப்புப்பற்றி அமெரிக்காவின் புதிய யோசனை

தொலைதூர ஏவுகணைகளைக் குறைக்கும் உடன்பாடுகாணுவதற்கு முன்னர் இருநாடுகளின் அணு ஏவாயுத தளங்களை பார்வையிடும் திட்டம் ஒன்றை அமெரிக்க அதிபர் ஜோர்ஜ் புஷ் சோவியத் யூனியனுக்கு சமர்ப்பித்துள்ளார்.

இறுதி உடன்படிக்கையில் இரு நாடுகளும் கைச்சாத்திடுவதற்கு முன்னர் இத்திட்டம் செயற்படுத்தப்பட வேண்டும் என்று அதிபர் புஷ் வலியுறுத்தி இருக்கிறார். (எ)

## 'மேனகை' தொலைத்த நகை 'விஸ்வாமித்ரர்' படப்பிடிப்பில்

ஹைதரபாத், ஜூன் 20

விஸ்வாமித்திரர் படப்பிடிப்பின் போது மேனகையாக நடிக்கும் மீனாட்சி சேஷாத்ரி தலையில் அணிந்திருந்த சிவப்பு வைரக்கல் பதிக்கப்பட்ட தங்க நகை ஒன்று காணாமற்போனது.

பத்திரிகையாளர் நடிகையைச் சூழ்ந்து பேட்டி கண்ட போது இச் சம்பவம் இடம் பெற்றது

படப்பிடிப்பு கடந்த ஞாயிறு ஹைதரபாத்தில் ஆரம்பமானது. இலங்கைப் பணத்தில் 3 இலட்சம் ரூபா பெறுமதியான அந்த நகையை பொலிஸார் கண்டுபிடித்து நடிகையிடம் ஒப்படைத்தனர். (எ)

### எம். ஜி. ஆர் மனைவி அமெ. பயணம்

புதுடில்லி ஜூன் 20

தமிழ்நாட்டின் முன்னாள் முதலமைச்சர் ஜானகி இராமச்சந்திரன் அமெரிக்கா பயணமானார்.

வைத்திய பரிசோதனைக்காக அவர் நியூயோர்க் மருத்துவமனை ஒன்றில் ஒரு மாதம் தங்கி இருப்பார். (எ)

## யூகோஸ்லேவியா நாட்டில் பிரிவினைக் கோரிக்கை உதயம்

பெல்கிரேட், ஜூன் 20

யூக்கோஸ்லேவியா வில்உள்ள மாநிலங்களில் ஒன்று 'பிரிந்து போகும் உரிமை' யை பிரகடனப்படுத்தி உள்ளது.

ஸ்லோவெனியா மாநில நாடாளுமன்றம் இந்தப் பிரகடனத்தை வெளியிட்டு உள்ளது.

யூகோஸ்லேவியாவில் உள்ள ஆறு மாநிலக் குடியரசுகளில் ஸ்லோவேனியாவும் ஒன்று.

கடந்த வெள்ளிக்கிழமை ஸ்லோவேனியா நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்தில்,

இம் மாநிலம் யூகோஸ்லோவேனியாவின் பகுதிதான் ஆனால் மாநில மக்கள் பிரிந்து போகும் உரிமையுடன் கூடிய சுயநிர்ணய உரிமையைப் பெற்றுள்ளார்கள் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

### இராஜினாமா

ரியோடிஜெனரோ, ஜூன் 20

பிரேஸில் மத்திய வங்கித் தலைவர் நேற்று இராஜினாமாச் செய்தார்.

ஊழல் குற்றச் சாட்டுக் காரணமாக அவர் தனது இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதியிடம் சமர்ப்பித்தார். (எ)

இந்திய பொதுத் தேர்தல்:

## தேசியமுன்னணி375தொகுதிகளில்போட்டி; 'உதயசூரியன்'பொதுச் சின்னமாகலாம்

ஹைதரபாத், ஜூன் 20

வருகிற இந்திய நாடாளுமன்றத்தேர்தலில் தேசிய முன்னணி 375 தொகுதிகளில் போட்டியிடும் என்று அறிவிக்கப்பட்டது.

முன்னணியில் அங்கம் வகிக்கும் சகல எதிர்க்கட்சிகளும் பொதுவான தேர்தல் விஞ்ஞாபனம் ஒன்றை வெளியிட ஒப்புக்கொண்டிருப்பதாகவும் அறிவிக்கப்பட்டது.

பொதுச்சின்னத்தில் போட்டியிடுவதா என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

வருகிற மாதம் 7 ஆம்திகதி புதுடில்லியில் நடைபெறவுள்ள முன்னணியின் செயற்குழுக் கூட்டத்தில் தேர்தல் சின்னம் பற்றித் தீர்மானிக்கப்படும் என்று முன்னணியின் அமைப்பாளர் வி. பி. சிங், குழுவின் தலைவர் திரு. என். ரி. ராமராவ் ஆகியோர் செய்தியாளரிடம் தெரிவித்தார்கள்.

உதயசூரியன் சின்னத்திலேயே தி.மு.க. பொதுத் தேர்தலிலும் போட்டியிட முதலமைச்சர் கருணாநிதி விருப்பம் தெரிவித்திருக்கிறார்.

தேர்தல் சின்னப்பிரச்சினையைத் தவிர்க்க, 'உதயசூரியன்' சின்னத்தையே பொதுச் சின்னமாகஏற்று போட்டியிட முன்னணியில்அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் முன்வந்துள்ளதாக அறிவிக்கப்பட்டது. (எ)

---

# இன்றைய நிலையில் கம்பியூட்டர் அறிவு மிக அத்தியாவசியமானது

### கருத்தரங்கில் பொறியியலாளர் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 21

இன்றைய உலகில் எழுத வாசிக்கத் தெரியாதவரின் நிலைமை எப்படி உள்ளதோ அதே போன்றே நாளைய உலகில் கம்பியூட்டர் அறிவு இல்லாதவர்களின் நிலைமை இருக்கும்.

காங்கேசன்துறைசிமெந்துக் கூட்டுத்தாபனப் பொறியியலாளர் திரு. நா. சுந்தரராசா மேற்கண்டவாறு கூறினார்.

ஸ்ரீ லங்கா பொறியியலாளர் நிறுவனத்தின் யாழ்ப்பாணக் கிளையும் யாழ். பல்கலைக்கழகமும் இணைந்து யாழ். பல்கலைக்கழகத்தில் சமீபத்தில் நடத்திய கம்பியூட்டர்களின் பிரயோசம் பற்றிய கருத்தரங்கில் திரு. நா. சுந்தரராசா உரையாற்றினார்.

அவர் தமது உரையில் மேலும் தெரிவித்ததாவது:-

கம்பியூட்டர் ஏனைய இயந்திரங்களைப் போன்றதோர் சாதாரண இயந்திரமே.

ஏனைய இயந்திரங்கள் அவற்றுக்கு கட்டளைகளை கொடுக்கும்பொழுதே அவ்வியக்கங்களைச் செயற்படுத்தும்.

ஆனால் கம்பியூட்டர்கள் நீங்கள் கொடுக்கும் கட்டளைகளை கிரகித்து வைத்திருக்கும் தன்மையுள்ளன. தேவைப்படும்பொழுது கொடுக்கப்பட்ட கட்டளைகளைப் பாவிக்கும் அல்லது செயற்படுத்தும் திறனுடையவை.

ஏனைய இயந்திரங்களுடன் தொடர்பு கொள்ளுவது அல்லது கட்டளைகள் கொடுப்பதைவிட கம்பியூட்டருடன் மிகவும் சுலபமான முறையில் தொடர்பு [illegible]. அநேகமானவர்கள் கம்பியூட்டர்மேல் கொண்டிருக்கும் ஆர்வத்துக்கு இதுவும் ஒரு காரணமாகும். அதாவது ஒரு மனிதன் இன்னொரு மனிதனுடன் என்ன முறைகளில் தொடர்பு கொள்கிறானோ அத்தனை முறைகளிலும் கம்பியூட்டர்களுடன் தொடர்பு கொள்ளலாம்.

உதாரணமாக நீங்கள் கம்பியூட்டர்களுடன் சம்பாஷிக்கலாம். எழுத்துமூலம், படம் மூலம், சைகைகள் மூலம் இப்படி சகல முறைகளாலும் தொடர்பு கொள்ளலாம்.

இதனால் ஏனைய இயந்திரங்களை விட இந்த இயந்திரத்தைக் கையாளுவது மிகவும் சுலபமாகிறது. தற்பொழுது கம்பியூட்டரின் பாவனை அதிக வேகத்தில் பரவி வருகிறது. அதுமாத்திரமன்று இன்னும் சில ஆண்டுகளில் எமது நாட்டின் முன்னேற்றத்துக்கு மிக அத்தியாவசியமானதாக மாறிவிடும்.

கம்பியூட்டர் நிபுணர்கள் சிறந்த கம்பியூட்டர்களை உருவாக்கிய போதிலும் அதனை பயன்படுத்துபவர்கள் எண்ணிக்கை எதிர்பார்த்த அளவு அதிகரிக்கவில்லை. இதற்குக் காரணம் கம்பியூட்டர்களுக்கு கட்டளைகளைக்கொடுப்பவர்கள் போதிய அளவு இல்லாததே. இதனை உணர்ந்த கம்பியூட்டர் நிபுணர்கள் சாதாரண பாவனையாளர்களும் — அதாவது கம்பியூட்டர்களுக்கு கட்டளைகளைக் கொடுக்கும் முறைகளில் அதிக ஆற்றல் அற்றவர்களும் கம்பியூட்டர்களை கையாளக்கூடிய முறைகளில் அவற்றை(Software Package) உருவாக்கியுள்ளார்கள். அவற்றை (User Friendly [illegible]) [illegible]. இந்த முறையின் மூலம் [illegible] பாவிப்பதும் சுலபம். இவற்றைப் பாவிப்பதற்கு உரிய பயிற்சியை ஒரு சில மணித்தியாலங்களில் பெற்றுவிடலாம்.

ஏனெனில் இவற்றை எவ்வாறு பாவிக்கலாம் என்பதை கம்பியூட்டர்களே பாவனையாளர்களுக்குத் தெரிவிக்கும்.

கம்பியூட்டர்களை பயனுள்ள முறைகளில் பாவிப்பதற்கு உற்பத்தியாளர் கூறுவதை விட சற்று கூடுதலான நேரப் பயிற்சி அவசியம்.

இப்படி அவர் கூறினார். (இ)

## மனித உரிமை மீறலுக்கு எதிராகக் குரல் கொடுத்தவர்

### கந்தசாமி நினைவு வைபவத்தில் உரை

யாழ்ப்பாணம், ஜூன் 21

மனித உரிமை மீறலகளுக்கு எதிராக சர்வதேச மட்டத்தில் குரல் கொடுத்து நிறுவனமாகத் திகழ்ந்தவர் திரு. கந்தசாமி.

இப்படிக் கூறினார் அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தலைவர் பேராசிரியர் கா. சிவத்தம்பி.

அகதிகள் புனர்வாழ்வுக் கழக ஆதரவில் திரு. கந்தசாமி நினைவு கூரும் வைபவம் திங்கள் மாலை இடம் பெற்ற போது அவர் தலைமை வகித்துப் பேசுகையில் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது;

கந்தசாமி சர்வதேச மட்டத்தில் மனித உரிமைக்காக பாடுபட்டவர். சர்வதேச மன்னிப்புச்சபை உட்பட பல அமைப்புக்களுடன் போராடினார்.

மக்களின் தேவையை உணர்ந்து அகதிகள் நிறுவனங்களை ஆரம்பித்தார். தமிழ் மக்களுடன் இணைந்து மண்ணுக்காக வாழ்ந்தார். அவரது சேவையை மக்கள் மறக்கக்கூடாது.

இப்படி அவர் கூறினார்.

வைபவத்தில் வண பிதா. ஜெயசீலன், வணபிதா சேவையர் குருஸ், வண பிதா. பயாஸ், திரு சிவ சிவமகாராசா, க. ஜீவகதாஸ் உட்படப் பலர் உரையாற்றினார்கள். (இ 3)

### தேர் வெள்ளோட்டம்

காங்கேசன்துறை துர்க்கா பரமேஸ்வரி அம்பாள் தேவஸ்தானத்தில் உருவாக்கப்பட்டுள்ள புதிய தேரின் வெள்ளோட்ட விழா இன்று புதன்கிழமை நடைபெறுகின்றது.

அராலியைச் சேர்ந்த அமரசிங்கம் ஆசாரியாரால் உருவாக்கப்பட்ட இத்தேர் வெள்ளோட்டம் இன்று நடைபெறுவதுடன் மறுநாள் வியாழக்கிழமை தேர் உற்சவம் இடம் பெறும் (இ- 68)

## கொழும்பிலிருந்து வர யாழ் ரயில் நிலையத்தில் ஆசனம் பதிவு செய்யலாம்

கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான மூன்றும் வகுப்பு உறங்கலிருக்கைக்கு யாழ்ப்பாணத்தில் பதிவு செய்து டிக்கெட் பெறலாம்.

இது வரை பிரதி திங்கள் தோறும் யாழ்ப்பாணத்தில் இருந்து கொழும்பு செல்வதற்கு தேவையான மூன்றும் வகுப்பு உறங்கலிருக்கை ஆசனப் பதிவுகளே யாழ். ரயில் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்டு வந்தன.

தற்சமயம் கொழும்பில் இருந்து யாழ்ப்பாணம் வருவதற்கான 3 ஆம் வகுப்பு ஆசனப் பதிவுக்கு 30 ஆசனங்கள் யாழ் ரயில் நிலையத்துக்கு ஒதுக்கப்பட்டுள்ளன. (இ-3)

### மகோற்சவம்

குருநகர், ஜூன் 21

ஆனைக்கோட்டை, ஸ்ரீ முத்தநயினார்கோயில் மகோற்சவம் கடந்த 19 ஆம் திகதி திங்கட்கிழமை பகல் 11 - 00 மணிக்கு நடைபெற்ற கொடியேற்ற வைபவத்துடன்ஆரம்பமாகி நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

24 ஆம் திகதி சனிக்கிழமை பகல் 108 சங்காபிஷேகம் நடைபெறும்.

ஜூலை 2ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு ரதோற்சவமும் 3ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 11-00 மணிக்கு தீர்த்த விழாவும் நடைபெற்று யாக கும்பாபிஷேகம்இடம்பெறும்.

4 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவனமும், 7ஆம் திகதி மாரியம்மன் பொங்கல் வைரவர் பூசையும் நடைபெறும். (ச-51)

★ ★

வறுத்தலைவிளான் மருதடி விநாயகர் ஆலய மகோற்சவம் நாளை 22 ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகின்றது.

அண்மையில் இவ்வாலயம் புனரமைப்பு செய்யப்பட்டு கும்பாபிஷேகம் இடம்பெற்றதுடன் முதன் முதலாக கொடிஸ்தம்பமும் ஸ்தாபிக்கப்பட்டது.

கொடியேற்ற விழாவை அடுத்து உற்சவம் தொடர்ந்து இடம்பெற்று ஜூலை 2 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்ததிருவிழாவும் இடம்பெறும். (இ - 68)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்புடன் அழைக்கின்றது
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்

★ தரமான வர்ண நிழற்படப் பிரதி ஒன்று 5/-
நெக்கட்டிவ் [Processing] செய்தல் இலவசம்
★ விற்பனை வர்ண நிழற்படச் சுருள்கள்
Kodak Fuji Konic.
Tudor Fort B/W

பெற்றுக்கொள்ள நாடுங்கள்.



# உதயன்

21 - 06 - 1989 புதன்கிழமை



எம்மிடம் வர்ண நிழற்படப் [illegible]
பிரதியாக்கம் செய்பவர்களுக்கு
வர்ண நிழற்படச் சுருள்கள
போட்டோ அல்பங்கள் இலவசம
மேலதிக விபரங்களுக்கு
ஆர்த்தி ஜுவல்லர்ஸ்
111, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.


### யாழ். மாவட்டப் பாடசாலைகளில்

# மதிய உணவுக்குப் பதில் பணம் இல்லை

## அதிபர்கள் கோரிக்கை நிராகரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மாணவர்களுக்கு உணவு வழங்குவதில் பல குறைபாடுகள் இருப்பதால் பணமே வழங்கப்பட வேண்டும் என்று யாழ். மாவட்ட பாடசாலை அதிபர்கள் விடுத்த கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

யாழ். கல்வித் திணைக்களத்தில் மதிய உணவுத் திட்டம் சம்பந்தமாக இடம்பெற்ற கலந்துரையாடல் கூட்டத்தில் இக்கோரிக்கை நிராகரிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் கலந்துகொண்ட கொத்தணி அதிபர்கள் முன்வைத்த கோரிக்கைகள் வருமாறு:-

★ மதிய உணவுத் திட்டத்தில் அதிபர், ஆசிரியர்கள் படும் சஷ்டத்தையிட்டு எவரும் கணக்கில் எடுப்பதில்லை. மாணவர்கள் சோறு உண்பதில் கூடுதல் விருப்பம் கொண்டுள்ளனர் பயறு, கௌபியில் விருப்பம் குறைவு.

★ பாடசாலைகளில் உணவுப் பொருட்களை வைக்க இடமில்லை. சமையல் செய்ய இடம் இல்லை. பாத்திரங்கள் இல்லை. மாணவர்களின் கோப்பைகளை வைக்க இடமில்லை. தண்ணீர் வசதி இல்லை. சுகாதார வசதியான இடமில்லை.

★ தற்சமய சூழ்நிலைகளால் பெரிய பாடசாலைகளில் உணவு வழங்குவது பெரும் சிரமமாக உள்ளது. ஆகவே மாணவர்களுக்கு உணவுக்குப் பதில் பணம் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். அதுவும் தற்காலிக ஏற்பாடாக இதைச் செய்யலாம்.

★ உணவுப் பொருள்கள் வாங்குவதில் ஏற்படும் கஷ்ட நிலையைப் போக்க கூட்டுறவு அமைப்புக்கள் மூலம் பொருள்கள் கொள்வனவு செய்ய ஏற்பாடு செய்ய வேண்டும்.

★ கூட்டுறவு அமைப்பிடம் இருந்து தினமும் சமைத்த உணவுபெற அனுமதிக்க வேண்டும்.

★ மாணவருக்கு வழங்கப்படும் மூன்று ரூபாவை ஐந்து ரூபாவாக உயர்த்த வேண்டும்.

★ கல்வித் திணைக்களத்தில் பாடவிதானப் பிரிவு, பரீட்சைப் பிரிவு என்று இருப்பதைப் போல மதிய உணவுப் பிரிவு ஒன்றை உருவாக்கி மதிய உணவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும்;

மதிய உணவுத் திட்டத்தின் கீழ் மாகாண சபை எடுத்த தீர்மானத்தின்படி உணவே மாணவர்களுக்கு வழங்கப்பட வேண்டும் என்று கல்விப் பணிப்பாளர் தெரிவித்தார்.

அதிபர்கள் விடுத்த கோரிக்கைகளை கல்வி அமைச்சு உயர் மட்டத்துடன் பேசித் தீர்த்து வைப்பதாக கல்வி அமைச்சைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் உறுதி அளித்தார். (அ-3)

## மட்டக்களப்பில் ஸ்தம்பிதம்

மட்டக்களப்பு, ஜூன் 21

மட்டக்களப்பு மாவட்டத்தில் மக்களின் நாளாந்த அலுவல்கள் ஸ்தம்பித நிலையில் உள்ளன. மட்டக்களப்பு நகரம் நேற்று ஸ்தம்பித நிலையில் காணப்பட்டது.

இ. போ. ச. வேலை நிறுத்தம் காரணமாக நேற்று ஒன்பதாவது நாளாக இ. போ. ச. பஸ் சேவை நடைபெறவில்லை.

எரிபொருள் விநியோகம் சீராகிவிட்டதால் தனியார் பஸ் சேவைகள் வழமைக்கு திரும்பிவிட்டன. எனினும் கட்டணங்கள் இருமடங்காகி விட்டன.

போக்குவரத்துச்சபை வேலை நிறுத்தம் காரணமாக மட்டக்களப்பில் இரு யாழ். டிப்போ பஸ்கள் திரும்ப முடியாமல் மட்டக்களப்பு டிப்போவில் தரித்து நிற்கின்றன.

நேற்றுப் பாடசாலைகள் திறந்திருந்த போதிலும் மாணவர்கள் வரவு 10 சத வீதத்திற்கும் குறைவாகவே இருந்தது.

இ. போ. ச. பஸ் சேவையின்மையால் வாரத்தில் இரு நாட்கள் மட்டும்தான் வெளியூர் தபால் சேவை நடைபெறுகின்றன. (அ-21)

## யாழ். மாவட்டத்தில் 2,000பேருக்கு ஆசிரியர் பதவி

விரைவில் நியமிக்கப்பட இருக்கும் 25 ஆயிரம் பயிலுநர் ஆசிரியர் பதவிகளில் யாழ் மாவட்டத்திலிருந்து 2 ஆயிரம் பேருக்கு நியமனம் வழங்கப்படும்.

இத்தகவலை கல்வி அமைச்சைச் சேர்ந்த கல்விப் பணிப்பாளர் திரு. வெ.சபாநாயகம் தெரிவித்தார்.

யாழ் மாவட்டத்துக்கு தெரிவாக இருக்கும் இவ்வாசிரியர்கள் மூலம் ஆசிரியர் பற்றுக்குறை ஓரளவேனும் நீங்கும் என அவர் நம்பிக்கை தெரிவித்தார். (அ-3)


எமது புதிய வெளியீடு

S. V. சேகர் — ரேகா
S. S. சந்திரன் — மனோரமா
நடித்த
★ தங்கமான புருஷன் ★

வீடியோ விமல்

117, மானிப்பாய் வீதி,
ஐந்து சந்தி, (மேல் மாடி)
யாழ்ப்பாணம்.
[11320]



வெற்றுச்சாக்கு விற்பனை

வலி. கிழக்கு வடபகுதி
பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், அச்சுவேலி.

எமது சங்கத்தில் 3273 வெற்றுச்சாக்குகள் கேள்வி விண்ணப்பமூலம் விற்பனைக்கு இருக்கின்றது. விண்ணப்பிக்க விரும்புவோர், ரூபா 5/- கட்டி விண்ணப்பப் பத்திரத்தைப் பெற்று மீளத்தக்க வைப்புப் பணமாக ரூபா 250/- கட்டி விண்ணப்பிக்கலாம்.

விண்ணப்பங்கள் 27-06-89ஆம் திகதிக்குப் பிந்தாமல், 'தலைவர், வலி. கிழக்கு வடபகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், இராசவீதி, அச்சுவேலி' என்ற விலாசத்துக்கு அனுப்பி வைக்க வேண்டும். என்வலப்பில் இடதுபக்க மேல்மூலையில் ''வெற்றுச்சாக்கு கேள்வி விலை'' எனக் குறிப்பிடல் வேண்டும்.

இங்ஙனம்
கூட்டுறவுச் சேவையிலுள்ள,
மூ: ஆனந்தகிருஷ்ணன்
பொது முகாமையாளர்
(சி/2883)


### கொழும்பில்:..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

பேசப்பட்டது;

இதேவேளை போக்குவரத்துச்சபை ஊழியர்களின் வேலை நிறுத்தத்துக்கு ஆதரவாகத் துறைமுக ஊழியர்களும் நேற்று வேலை நிறுத்தத்தில் குதித்தனர். இது அடையாள வேலைநிறுத்தம் என்றே நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

அனேகமான தனியார் பஸ்களும் நேற்று சேவையில் ஈடுபடவில்லை, (உ)

### தனியார்துறை,..

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

கட்டுப்பாடு (Credit Squeeze) 15 11-1989 வரை நீடிக்கும் என்று மத்திய வங்கி அறிவித்திருக்கிறது.

மே 31 ஆம் திகதி வரை வழங்கப்பட்ட கடன் தொகை உச்ச வரம்புக்கு உட்பட்டதாகக் கடன் வழங்கப்பட வேண்டும் என்றும் மத்திய வங்கி அறிவித்து உள்ளது.

இந்த உச்சவரம்புக் கடன்கள், மேலதிகப்பற்று இறக்குமதி ஆகியனவற்றுக்கும் பொருந்தும்

புதிய கடன் கட்டுப்பாட்டால் பாவனைப் பொருள் இறக்குமதி பாதிக்கப்படலாம்.

பாவனைப் பொருள் இறக்குமதிக்கான கட்டளைகள் (Letters of Credit) இறக்குமதி செய்யப்படும் பொருள்களின் 100 சதவீதமான பெறுமதிப்பணம் வைப்புச் செய்யப்பட்ட பின்னர் மட்டுமே வர்த்தக வங்கிகளால் ஏற்றுக்கொள்ளப்பட வேண்டும் என்று மத்திய வங்கி வரையறுத்துள்ளது.

இந்த வரையறைக்குட்பட்டுள்ள பாவனைப் பொருள்கள் வருமாறு:—

வீட்டுப் பாவனைக்குரிய காஸ், மின்சார மற்றும் மெக்கானிக்கல் உபகரணங்கள், குளிர்சாதன வசதிப் பொருள்கள், சிகரெட் மற்றும் புகையிலைப் பொருள்கள், கம்பியூட்டர் மற்றும் தகவல் தரவு இயந்திரங்கள், மட்பாண்ட மற்றும் போர்சலின் பொருள்கள், பியர், ஏல், ஸ்டவுட், கண்ணாடியிலான தம்ளர்கள், மோட்டார்கள், மோட்டார் சைக்கிள் வாகனுதிப் பொருட்கள், புகைப்படத்துறைக்கான பொருள்கள், வானொலி-டெலிவிஷன் மற்றும் அவற்றுக்கான பொருட்கள், வீடியோக் கஸட்கள், இசைத் தட்டுக்கள், கைக்கடிகாரங்கள், மணிக்கூடுகள், நில விரிப்புக்கள் [illegible] (உ-எ)

### விஞ்ஞானபீட மாணவர்கள் பகிஷ்கரிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 21

யாழ் - பல்கலைக்கழக விஞ்ஞான பீட மாணவர்கள் நேற்று விரிவுரைகளைப் பகிஷ்கரித்தனர்.

விஞ்ஞான பீடமாணவர்களின் பரீட்சைகள் தொடர்பாகவே இப்பகிஷ்கரிப்பு இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது. (உ-3)

### நெஞ்சில் கத்திக் குத்துடன்

## மோட்டார் சைக்கிளில் ஏறி கொள்ளையரைத் துரத்தியவர்

யாழ்ப்பாணம், ஜூன் 21

கொள்ளையர்களின் கத்திக் குத்துக்கு உள்ளான கடைக்காரர் ஒருவர் நெஞ்சிலிருந்தும் கையிலிருந்தும் ஓடிய இரத்தத்தையும் பொருட்படுத்தாது மோட்டார் சைக்கிளில் அவர்களைத் துரத்திச் சென்றார்.

இந்தச் சம்பவம் அல்லைப்பிட்டியில் இடம் பெற்றது.

சம்பவம் பற்றிக் கூறப்படுவதாவது;-

அல்லைப்பிட்டியில் ஒரு கடைக்குள் துப்பாக்கி, கத்தி போன்ற ஆயுதங்களுடன் நுழைந்த மூவர் கடையையும் வீட்டையும் சோதனையிடப் போவதாகத் தெரிவித்தனராம்.

கடைகுள் இருந்த பெட்டிகளையும் வீட்டில் இருந்த பெட்டிகளையும் சோதனையிட்ட அவர்கள் 7 ஆயிரம் ரூபா ரொக்கப்பணத்தை ஒரு பெட்டியில் இருந்து கையாடினர்.

இதனைக் கண்ட கடைக்காரர் அவர்களில் இருவரை மடக்கிப்பிடிக்கமுயன்றார். அடுத்துமூன்றாவதுநபர்கடைக்காரரின் நெஞ்சிலும் பின்பு கையிலும் கத்தியால் குத்தினாராம்

பின்பு கொள்ளையர்கள் மூவரும் சைக்கிள்களில் யாழ்ப்பாணம் நோக்கி தப்பி ஓடினர்.

ஓடும் இரத்தத்தையும் பொருட்படுத்தாது கடைக்காரர் அவர்களை மோட்டார் சைக்கிளில் துரத்திச் சென்றும் பிடிக்க முடியவில்லை.

கடைக்காரர் தற்போது யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்று வருகிறார்.

### அவசரகால---

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சக்திகள் அரச நடவடிக்கைகளை குழப்புவதற்கும் பொருளாதார திட்டங்களைச் சீர்குலைப்பதற்கும் எத்தனித்து வருகின்றன என்பது தற்போது தெளிவாகியுள்ளது.

ஊழியர்கள் வேலைநிறுத்தத்தில் ஈடுபடுமாறு பலவந்தப்படுத்தப்படுகிறார்கள்.

**சேவைகள் சீர்குலைப்பு**

அத்தியாவசிய சேவைகள் சீர்குலைக்கப்படுகின்றன. பொருளாதாரத்திலும் மக்களின் வாழ்க்கையிலும் பாரதூரமான விளைவுகளை இந்த நடவடிக்கை ஏற்படுத்தியுள்ளது:

ஒன்றுமறியாத பாடசாலைச் சிறுவர்கள் ஆர்ப்பாட்டங்களிலும் வன்செயல்களிலும் ஈடுபடுமாறு தூண்டப்பட்டு வருகின்றனர்.

ஆகவே சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டவும், மீண்டும் நாட்டில் சகஜ நிலையை ஏற்படுத்தவும் அவசரகாலச் சட்டத்தை பிரகடனப்படுத்த வேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.- மிகத் தயக்கத்துடன், மக்கள் நலனைக் கருத்திற் கொண்டே அவசரகாலச் சட்டத்தை அரசு கொண்டுவருகிறது என்று அமைச்சர் விஜேரத்தின சொன்னார். (உ-எ)

### நயினாதீவு.--

(1ஆம் பக்கத் தொடர்ச்சி)

சத்து பத்தாயிரம் ரூபாவையும் சபை வருமானமாக பெற்றுக்கொண்டது.

இவ்வாறு ஒரு நாளில், ஒரே பாதையில் சேவையாற்றி அதிக தொகையை வசூலாகப் பெற்றது, வ. பி. போ. சபையின் வரலாற்றிலேயே இது தான் முதற்தடவை எனவும்—

நயினாதீவு உற்சவத்திற்கு நடத்தப்பட்ட சேவையில் ஊழியர்கள் செய்த அளப்பரிய பங்களிப்பினாலேயே இது சாத்தியமானது என்றும் சபை [illegible] லுக்குத் தெரிவித்தார். (உ-9)

### யாழ்தேவி சேவை நேற்று இல்லை

கொழும்பு, ஜூன் 21

கொழும்பு—வவுனியா யாழ்தேவி ரயில் சேவையும் நேற்று நடைபெறவில்லை (உ-9)

### எமது கல்வியில்,..

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

லாத நிலையில் ஆயுதபாணிகளால் கடத்திச் செல்லப்படுவது மிகவும் கண்டிக்கப்பட வேண்டியது.

துர்ப்பாக்கியமான இந்த செயற்பாடுகளிற்கு காத்திரமான பதில் நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் இதற்குப் பொறுப்பானவர்கள் வெறும் கண்டன அறிக்கைகளையும், மேலோட்டமான அறிக்கைகளையும் பத்திரிகைகளில் வெளியிடுவதன்மூலம் இதனைத் தடுத்து நிறுத்த முடியாது.

இச்செயற்பாடுகள்தொடர்ந்தும் நிகழுமாயின் அவர்கள் தமது கல்வியைத் தொடர முடியாது பாதுகாப்பை மட்டும் உறுதிசெய்யப்படவேண்டிய கட்டத்திற்குத் தள்ளப்படுவார்கள் இதனால் எமது இனம் பாரிய பின்விளைவுகளை எதிர்நோக்கவேண்டி ஏற்படும்.

ஆகவே எமது பாதுசாப்பை —எமது சுதந்திரமான நடமாட்டத்தை — உறுதி செய்யாதவரை நாம் கல்வியைத் தொடர்வதில் எந்தவித அர்த்தமும் இல்லை. இதற்குப் பொறுப்பானவர்கள், துரிதமான தகுந்த நடவடிக்கைகளை எடுப்பதன்மூலம் நாம் எமது கல்வியைத் தொடர உதவுவார்கள் என எண்ணுகிறோம். அதுவரை எமது போராட்டம் — தொடரும் எனத்தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

### அமைதிப் படை..,

[1ஆம் பக்கத் தொடர்ச்சி]

இத்தகவல்களை பிரதம மந்திரி திரு. டி. பி. விஜேதுங்கா நேற்று நாடாளுமன்றத்தில் வெளியிட்டார்.

இந்திய — இலங்கை ஒப்பந்தம் பற்றி சுதந்திரக் கட்சி எம். பி.யான திரு.ஜெயராஜ் பெர்ணண்டோபுள்ளே நேற்று நாடாளுமன்றத்தில் கேள்விகளைக் கேட்டார்.

அவற்றுக்குப் பதிலளித்த பிரதமர் சொன்னதாவது:—

அமைதி உடன்பாட்டின் கீழ் வடக்கு—கிழக்கு மாகாணங்களில் வாழும் சகல இன மக்களுக்கும் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பை அமைதிப் படை ஏற்றுக்கொண்டது.

அதைத் தொடர்ந்து இலங்கைப் பாதுகாப்புப் படையினர் விலக்கப்பட்டனர்.

ஒப்பந்தம் அமுலுக்கு வந்த பின்னர் இந்தியாவில் தங்கியிருந்த இலங்கைத் தமிழ் அகதிகள் முப்பதாயிரம் பேர் நாடு திரும்பினர்.

ஆனால் இந்திய பாஸ்போர்ட் பெற்றுள்ள சுமார் 84 ஆயிரம் பேர் இன்னும் இலங்கையிலேயே தங்கியுள்ளனர்; -என்றார். (அ-உ-எ)

## மரண அறிவித்தல்கள்

(நேர மாற்றம்)

### திருமதி கமலாம்பிகை திருஞானம்

22-06-1989 வியாழக்கிழமை நடைபெறவிருந்த ஈமக்கிரியைகள், தவிர்க்க முடியாத காரணங்களால் 24-06-1989 சனிக்கிழமை பிற்பகல் 4-00 மணியளவில் நடைபெறும் என்பதை அறியத்தருகிறோம்.

றெயில் றோட், தகவல்:
கொக்குவில். (960) இ. சி. திருஞானம்

### திருமதி நாகம்மா அருளானந்தம்

திருமதி நாகம்மா அருளானந்தம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற சி. அருளானந்தம் (ஓய்வு பெற்ற புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் அன்பு மனைவியும், திருமதி நவமணி அரியரத்தினம், திருமதி செல்வமலர் செல்வநாயகம், இராசசூரியர், கனகசூரியர் (மின்பகுதி லங்கா சிமெந்து நிறுவனம், காங்கேசன்துறை) ஆகியோரின் அன்புத்தாயாரும், ச. அரியரத்தினம் (ஓய்வு பெற்ற விரிவுரையாளர், மீன்பிடி பயிற்சி நிலையம்), காலஞ்சென்ற த. செல்வநாயகம் (வனபரிபாலனத் திணைக்களம் ஓவசியர்), திருமதி பத்மாதேவி இராசசூரியர், திருமதி ங்களா தவி கனகசூரியர் ஆகியோரின் மாமியாரும், மரியகுமார், சந்திரகுமார், சுகிர்தகுமார், சக்திதரன், இந்திரகுமாரி, சந்திரவதனா, காயத்ரி ஆகியோரின் பேத்தியுமாவார். அன்னாரின் தகனக்கிரியைகள் நேற்று செவ்வாய்க்கிழமை (20-06-89) ஊரெழு பொக்கணை மயானத்தில் நடைபெற்றது என்பதை உறவினர்களுக்கும் நண்பர்களுக்கும் அறியத்தருகின்றேன்.

தகவல்: அ. கனகசூரியர்.

'அருள்வாசா'
ஊரெழு மேற்கு,
சுன்னாகம். (11316)

### சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை

(திருநா)

[ Retired State Officer ]

புலோலி தெற்கு, புலோலியை பிறப்பிடமாகக் கொண்டவரும், சுன்னாகம் கிழக்கு, சுன்னாகத்தை வசிப்பிடமாகக் கொண்டவரும் புலோலி மக்களால் 'திருநா அண்ணை' என்று அன்புடன் அழைக்கப்படும் திரு. சின்னத்தம்பி கணபதிப்பிள்ளை (திருநா) அவர்கள் 20-06 89 செவ்வாய்க்கிழமை காலை 9-00 மணியளவில் காலமானார். இவர் இராசம்மா (பரமேஸ்வரி)யின் அன்புக் கணவரும் திருமாவளவன், வாகீசன் (Denmark) சிவானந்தி, மாதினி ஆகியோரின் அன்புத் தந்தையும், இந்துமதி கதிர்காமநாதன் ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவப்பிரியனின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிச்சடங்கு இன்று 21-06-89 புதன்கிழமை காலை 10.00 மணியளவில் நடைபெற்று. தகனக்கிரியைக்காக சுன்னாகம் கொத்தியாலடி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், மற்றும் நண்பர்கள் அனைவரையும் ஏற்றுக் கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
குடும்பத்தினர்.

''திருவதிகை''
சுன்னாகம் கிழக்கு,
சுன்னாகம். (11321)

### திருமதி பொன்னம்மா தேவசகாயம்பிள்ளை

தெல்லிப்பளை பொன்னம்மா தேவசகாயம்பிள்ளை 20 - 06 - 89 இல் காலமானார்.

இவர் திரு. பி. செ. தேவசகாயம்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், டி. எவ். தேவராசா (தொழில் நுட்ப உத்தியோகஸ்தர் சமநல சேவை காரியாலயம் யாழ்ப்பாணம்.) திருமதி மேரிதிரேசா குமாரகுலசிங்கம், செல்வி நீற்ரு, ஆகியோரின் அன்புத் தாயாரும். அரியமலர் பிரான்சிஸ்காவின் அன்பு மாமியாரும், அமிர், அன்ரனி, (யூனியன் கல்லூரி) கிரிசாந்தினியின் அன்புப் பாட்டியுமாவார்.

நல்லடக்கம் 21-06-89 புதன்கிழமை இன்றுபிற்பகல் 3-00 மணியளவில் தெல்லிப்பளையில் நடைபெறும்.

தகவல்:
டி. எவ். தேவராசா.

தெல்லிப்பளை கிழக்கு,
தெல்லிப்பளை. (11315)

### செல்வன் சண்முகம் உதயவர்மன்

முல்லைத்தீவு புதுக்குடியிருப்பைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முல்லைத்தீவு புதுக்குடியிருப்பு மகா வித்தியாலய மாணவரும், தற்போது கந்தர்மடத்தில் வசித்தவருமாகிய சண்முகம் உதயவர்மன் (பேபி) 19-06-1989 இல் அகால மரணமானார்.

இவர் சபாரெத்தினம் சண்முகம் (அதிபர், விக்னேஸ்வராவித்தியாலயம்)-உமாமகேஸ்வரி தம்பதிகளின் கனிஷ்ட புதல்வரும், சடாட்சரலிங்கம் (பிரான்ஸ்), சாந்தகுமார் (யாழ். பௌதிகவியல் பீடம்), புவனேந்திரன் (யாழ். மருத்துவ பீடம்) ஆகியோரின் அன்புச் சகோதரரும், குணரெத்தினம், சுந்தரேஸ்வரன், சுந்தரமூர்த்தி ஆகியோரின் மருமகனும் ஆவார்.

அன்னாரது இறுதிக்கிரியைகள் 22-06-1989 வியாழக்கிழமை அவரது கந்தர்மடம் இல்லத்தில் நடைபெற்று, தகனக்கிரியைகள் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:

73, பலாலி றோட், ச. சண்முகம்
யாழ்ப்பாணம். [11323] (தகப்பன்)


இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேட்) லிமிட்டெட்டினால் யாழ்ப்பாணம், நாவலர் வீதி, 292/2 இல் உள்ள அச்சகத்தில் 21-06-1989 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org